பக்கங்கள்:08

# காலைக்கதிர்
# Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 08 வெள்ளிக்கிழமை 21.04.2023 கதிர்162

### தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து
## இந்தியாவின் கண் சொட்டு மருந்து பயன்பாட்டிலிருந்து உடன் நீக்கம்

**சுகாதார அமைச்சு அவசர நடவடிக்கை**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ப்ரெட்னிசோலன் (Prednisolone) கண் சொட்டு மருந்துகளை உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு சுகாதார அமைச்சு அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

அத்துடன், ப்ரெட்னிசோலோன்கண்சொட்டுமருந்துகளை மருத்துவமனைகளுக்கு வழங்குவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட மூன்று நோயாளிகள் ப்ரெட்னிசோலோன பயன்படுத்தியதன் பின்னர் சில சிக்கல்களை எதிர்கொண்டதையடுத்து, மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருதாவது,

தேசிய கண் வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் பின்னர் ஒரேசந்தர்ப்பத்தில்மூன்றுநோயாளர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட ☞2

## ஜனநாயகத்தின் பேரால் ஆட்சியை எதிர்ப்பதற்கு இடமளிக்கமுடியாது

**அஸ்கிரிய மாகாநாயக்கர் அறிவிப்பு**

ஜனநாயகஉரிமைகளை பயன்படுத்திக் கொண்டு ஒரு தரப்பினர் ஆட்சிக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சித்தால் அதற்கு இடமளிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்.

சுதந்திரமக்கள்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களானடலஸ்அழகபெரும, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வசந்த யாப்பா பண்டார, உதயன கிரிந்திகொட, முன்னாள் நகர சபை உறுப்பினர் ஆனந்த சனத் குமார ஆகியோர் வியாழக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்த விகாரைகளுக்குச் சென்று பேச்சு நடத்தினர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் தெளிவுப் படுத்துவதற்காகசுதந்திர ☞2

## இனிது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு இப்போது புதிய வடிவில் பிரச்சினை, அழுத்தம் வந்திருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி நிலைநாட்டப்படவில்லை என்கிற விவகாரத்தை கிறிஸ்தவ தலைமைப்பீடம் மீண்டும் உயர்த்திப் பிடிக்கத் தொடங்கியிருப்பது அவருக்கான புதிய தலையிடி. 4 வருடங்களுக்கு முன்னர் இதே நாளில்தான் தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது குண்டுகள் வெடித்தன. அந்தக் குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தியவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர். ஆனால் அவை யாரால் யாருடைய தேவைக்காகச் செய்யப்பட்டன என்ற உண்மை வெளிப்படுத்தப்படவில்லை என்பதே கிறிஸ்தவர்களின் குரல்.

அதனை வலியுறுத்தி நேற்றிரவு கட்டுவாப்பிட்டி தேவாலயத்திலிருந்து ☞2

## திருச்சபை குற்றச்சாட்டு

நீதிக்கான அமைதிப் பேரணியை தடுப்பதற்கு பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவுகளைப்பெறுவதற்கு முயற்சித்துள்ளதாக கத்தோலிக்கத் திருச்சபையின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

அவர் கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்பேதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

ஏப்ரல் 21 தக்குதலுக்கு நீதிகோரி இன்று (நேற்று) மாலை கட்டுவாப்பிட்டிய செபஸ்தியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவிருந்த அமைதிப் பேரணிக்கு எதிராக நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் தடை உத்தரவைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

இருப்பினும், மேலதிக நீதிவான் இந்திக்க சில்வா அந்த தடை உத்தரவுக்கோரிக்கையைநிராகரித்துள்ளார். அதேபோன்று வத்தனை நீதிமன்றிலும் தடை ☞2

# தேர்தல் நகைச்சுவையாகிவிட்டது

**பவ்ரல் அமைப்பு கவலை**

**நாட்டில் தேர்தல் என்பது நகைச்சுவையான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.**

**ஜனநாயகத்துக்கான சிவில் சமூக கூட்டமைப்பு வியாழக்கிழம கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: உள்ளூராட்சி மன்றத் தேர்தல், அரசமைப்புக்கும் தேர்தல் சட்டத்துக்கும் எதிராகச் சட்டரீதியில் அல்லாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சர்வதேச சமூகம் இதுதொடர்பாக பெரிதளவில் குரல்கொடுப்பதை காணக் கூடியதாக இல்லை.**

**எமது நாட்டு பிரச்சினைகளை நாட்டு மக்களே கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. இதனால் தான் சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்துக்கொண்டு, மக்களை அடக்கும் சட்ட மூலங்களை வாபஸ்பெற்றுக் கொள்ள ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிக்கிறோம்.**

**அத்துடன் இலங்கையில் தேர்தல் என்பது நகைச்சுவையான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்காக 4 தடவைகள் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த 4** ☞2

## முழு அடைப்பு போராட்டம் முன்னணியோடு தொடர்பற்றதாம்

எஸ்.நிதர்ஷன்

மக்களை ஏமாற்றி நல்ல பிள்ளைகளுக்கு நடிக்கிற தரப்புக்களின் கோரிக்கைகள் குறுத்துப் பெரிய அளவில் அலட்டி கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார்பொன்னம்பலம் , அதனால் ஏப்ரல் 25 நடக்கவிருக்கும் முழு அடைப்புப் போராட்டம் தம்மோடு தொடர்புபட்ட ஒரு விடயமல்ல எனவும் தெரிவித்தார். .

தமிழ்க் கட்சிகள் பலவும் இணைந்து ஏப்ரல் 25 கடையடப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்று அவரிடம் கேட்கப்பட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞2

## நல்லூரில் விடுதி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள லக்ஸோட்டியா எனும் அரை சொகுசு விடுதி மீது வியாழக்கிழமை இரவு கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. அந்தக் கும்பல் விடுதி உரிமையாளர் மீது சாணித் தண்ணி ஊற்றி அவரை அசிங்கப்படுத்தியுமுள்ளது. .

அருண்சித்தார்த்எனும்நபரின்தலைமையில் வந்த பெண்கள் உள்ளிட்ட 7 பேர் ☞2

## திட்டமிட்டே இந்த ஆட்சி பேச்சை ஒத்திவைக்கிறது

**தொழில் வல்லுநர்கள் கூட்டமைப்பு குற்றச்சாட்டு**

ஆட்சியாளர்கள்திட்டமிட்ட வகையில், தம்முடனான பேச்சுக்களைத் தொடர்ந்தும் ஒத்திவைத்து வருகின்றனர் என்றுகுற்றஞ்சாட்டியதொழில் வல்லுநர்களின்தொழிற்சங்க கூட்டமைப்பு எதிர்காலத்தில் தமது பிரச்சினைகளுக்கான தீர்வினை நோக்கி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் கூட்டம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ,பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் , இலங்கை வங்கி ஊழியர் சங்கம், ☞2

## எம்மை ஒருபோதும் அச்சுறுத்தி அடிபணிய வைக்கவே முடியாது

**பல்கலை ஆசிரியர் சம்மேளனம் தெரிவிப்பு**

எம்மை அச்சறுத்தி அடிபணி வைக்க முடியாது என்பதோடு விடைத்தாள் திருத்தும் பிரச்சினைக்கு தீர்வினைக்காணவும் முடியாது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனத்தினர் உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளிலிருந்து விலகியுள்ள நிலையில், உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை அடுத்த வாரத்திற்குள் தொடங்காவிட்டால், கல்வியை அத்தியாவசியசேவையாகஅறிவிக்கப் போவதாக ஜனாதிபதி செவ்வாய்க்கிழமை தெரிவித்த கருத்திற்கு அச்சங்கம் பதிலளித்தது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் ☞2

## பதிலடிக்கு நாமும் தயார் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

எம்மை அச்சுறுத்தி அடிபணிய வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முனைகின்றார் என்றால் அதற்கான பதிலடியை வழங்குவதற்கு நாமும் தயாராகவுள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி அமைச்சர் ☞2

## தேசிய ஆட்சி அமைப்பதில் மைத்திரியே அதிக அக்கறை

**சிறைசெல்லாது தப்பும் நகர்வு அதுன என டிலான் எம்.பி. சாடல்**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தேசிய ஆட்சியை அமைப்பதில் அதிக அக்கறை கொண்டுள்ளார் அவர் ராஜிதவுக்கு முன்னதாகவே அரசுடன் இணையவுள்ளார் என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் சிறை செல்வதை தடுப்பதற்காக அவர் இந்த அரசியல் நகர்வைச் செய்துள்ளார் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

நாவலவில் வியாழக் கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் தேசிய ஆட்சி தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக பொது ஜன பெரமுனவின் 134 உறுப்பினர்கள் தெரிவு செய்தார்கள். தற்போது பொது ஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அமைச்சு பதவிகள் இல்லாமல் உள்ளார்கள்.

10 இற்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்குமாறு பொது ஜனபெரமுன ஜனாதிபதியிடம் பலமுறைவலியுறுத்தியுள்ளது. அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கையை முப்பதைவிடவும் அதிகரிக்க

## குரங்குகள் பற்றி அக்கறைப்படுகின்றவர்கள் மாணவர் கல்வி பற்றி கவலைப்படவில்லை

**பெற்றோர் சங்கம் காட்டம்: மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு**

உயர்தரப்பரீட்சைகளுக்கான விடைத்தாள்களைத் திருத்தும் பணி தாமதப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளோம் என்று அகில இலங்கை பெற்றோர் சங்கத்தின் தலைவர் இந்திக ரணசிங்க தெரிவித்தார்.

பத்து நாட்களுக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் ஒட்டுமொத்த பெற்றோரும் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் புதன்கிழமை முறைப்பாடு அளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குரங்குகளுக்கு ஆதரவாகக் கொடி உயர்த்தும் பொது அமைப்பினர் உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாவது தொடர்பில் அவதானம்செலுத்தவில்லை. இதனை மனித உரிமை மீறல் செயற்பாடாகவும் அவர்கள் கருதாமல் இருப்பது கவலைக்குரியது.

வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்பரீட்சைவிடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகியுள்ளார்கள். ஆட்சியாளர்களுடன் பேசித் தீர்த்துக்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இவர்கள் மாணவர்களை பகடைகாயாக்குவது எந்த விதத்தில் நியாயமாகும்?

கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளை நடத்துவதில் ஏற்கனவே ஒருவருட காலம் தாமதம் காணப்படுகிறது. இந்தப் பின்னணியில் தொழிற்சங்க போராட்டத்தினால் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமானால் தேசிய பரீட்சைகள் தொடர்ந்து தாமதமாகும்.

பரீட்சைவிடைத்தாள்திருத்தும் பணிகளைத் ☞2

## அதிகார முரண்பாடுகளற்ற தேசிய ஆட்சிக்கு ஆதரவு

**பொது ஜன பெரமுன அறிவிப்பு**

அதிகார முரண்பாடுகள் அற்ற, பொறுப்புக்கூறும் தரப்பைக் கொண்ட தேசிய ஆட்சிக்கு ஆதரவளிப்பதற்கு நாம் தயார் என்று பொது ஜன பெரமுன தெரிவித்துள்ளது.



பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவஎதிரிமானேஇதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

தேசிய ஆட்சி உருவாக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் கடந்த நல்லாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தேசிய ஆட்சிபோல்மீண்டும்தேசிய ஆட்சியொன்று தோற்றம் பெறக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக தேசிய ஆட்சி அமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக் ஷ எடுத்திருந்தார். தேசிய ஆட்சி பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக அமையுமாக இருந்தால், அதனை முழுமையாக ஏற்போம்.

அதற்காக கட்சி என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அமைக்கும் தேசிய ஆட்சி நல்லாட்சியில் உருவாக்கப்பட்ட தேசிய ஆட்சி போன்று அமையக்கூடாது.

நல்லாட்சியில்ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவருக்கும் இடையில் காணப்பட்ட அதிகார போட்டித்தன்மை மீண்டும் தோற்றம் பெறக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். தேசிய ஆட்சியில் பொறுப்புகூறும் தரப்பு அதிகாரத்தை மையப்படுத்தியதாகக் காணப்படவேண்டியது அவசியமானது - என்றார்.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பேரணியாகப் புறப் பட்டுக் கொழும்பு நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். இன்று மனிதச் சங்கிலிப் போராட்டமும் அறிவிக்கப்பட் டிருக்கின்றது.

இலங்கையின்கிறிஸ்தவ தலைமைப்பீடத்தில் ஏற்பட்டி ருக்கக்கூடிய மாற்றமே அந்தத் தரப்பினர் தற்போது தீவிர நிலைப்பாடுகளை எடுப்பதற்கான காரணம் என்றும்கொழும்புச்செய்திகள் கூறுகின்றன. அண்மையில் கொழும்புக்கானவத்திக்கான் பிரதிநிதியாகப் புதியவர் நியமனம் செய்யப்பட்டார். அவர் இந்த விடயத்தில் மிகத்தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர் என்று கூறப் படுகின்றது.

பொருளாதார மீட்சிக்கு மேற்கு நாடுகளின் உதவி மற்றும் ஆதரவை பெரிதும் எதிர்பார்த்திருக்கும்இலங்கை உயிர்த்தஞாயிறுதாக்குதலின் சூத்திரதாரிகளை நீதியின் முன் நிறுத்துவதில், அதாவது தமதுகுறுகியநலன்களுக்காக கிறிஸ்தவர்களை இலக்கு வைத்தவர்களை நீதியின் முன்நிறுத்துவதில் இலங்கை ஆட்சியாளர்கள் காத்திரமான பங்கை ஆற்றவில்லை என்ற வத்திக்கானின் கருத்தை அவர் தனது பணிக்காலத்தில் தீவிரமாக வெளிப்படுத்துவார் என்று கூறப்படுகின்றது.

அதற்கேற்றவகையில் அவரும் வந்த உடனேயே உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்களுக்கு நான்கு ஆண்டு கள் கடந்தும் நீதி நிலைநாட் டப்படவில்லைஎன்கிறசாரப்பட பகிரங்கமாகஒருகுற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இலங்கையின் பேராய ரானகர்தினால்மல்கம்ரஞ்சித் இந்தவிடயத்தில்இதுவரையில் ஆட்சியாளர்களுக்குவழங்கிய அழுத்தம்போதியதல்லஎன்கிற கருத்தும் வத்திக்கானிடம் இருக்கிறது என்று கூறப் படுகின்றது. புதிய பிரதிநிதி - அதுவும் இது விடயத்தில் கடும் பிடியைக்கொண்டிருக்கக்கூடிய ஒருவர் - வந்திருக்கக்கூடிய நிலையில் தன்னைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மல்கம் ரஞ்சித்திற்கும் இது தொடர்பில் கடும்பிடியை வெளிப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதால் அவர் இன்றைய போராட்டங்களுக்குஅழைப்பு விடுத்தார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அவர் இந்தப் போராட் டத்திற்கான அழைப்பை விடுத்திருந்தாலும்அவரைத் தாண்டிய தரப்புகளே போராட்டம், பேரணி என்ப வற்றைக் கையாள்கின்றன என்றும்உள்வீட்டுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு மிக முக்கியமான விடயமும் ஒன்றுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி கிட்டவேண்டும் என்கிற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டாலும் இதுபோன்றேதமிழர்களுக்கு போரில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்கிற கோரிக்கைக்காக கொழும்பு கிறிஸ்தவ மதத் தலைமைப்பீடம்இதுவரையில் குரல் கொடுத்ததில்லை என்பதைபெரும்குறையாகச் சுட்டிக்காட்டும்வடக்குகிழக்கு கிறிஸ்தவக்கட்டமைப்பு.இந்தப் போராட்டங்கள்எதிர்ப்புக்களில் இருந்து தன்னைத்தள்ளியே வைத்துள்ளது.

சிங்களவர்களுக்கு ஒரு நீதி தமிழர்களுக்கு ஒரு நீதி என்று எப்படி இருக்கமுடியும், வத்திக்கான் இது விடயத்தில் அனைவரையும் சமமாகக் கையாளவேண்டும்என்கின் றதுவடக்குகிழக்குகிறிஸ்தவக் கட்டமைப்பு. இது தொடர்பில் ஏற்கனவே வத்திக்கானுக்குச் சுட்டிக்காட்டப்பட்டு, இலங்கை யின்கிறிஸ்தவக்கட்டமைப்பை இரண்டாகப் பிரித்து வடக்கு கிழக்குக்கான பேராயரு டன்ஒருதனிப்பிரிவுஉருவாக் கப்படவேண்டும் என்கிற கோரிக்கையும் ஏற்கனவே வத்திக்கானிடம் வலியுறுத் தப்பட்டு வருகின்றது.

பாப்பரசரின் புதிய பிரதிநிதியின் காலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்கு தலுக்கான நீதி விடயயத்தில் மட்டுமன்றி தமிழர்கள் விடயத்தையும் அவர் எப்படிக் கையாளப்போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**

## தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பங்களும்நிராகரிக்கப் பட்டிருக்கின்றன. தேர்தலுக் கான திகதி அறிவிப்பு செய்ய முடியாத நிலைக்கு தேர்தல் ஆணைக்குழுவைஇந்தஅட்சி நிர்க்கதிக் குள்ளாக் கியுள்ளது.

உள்ளுராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்குஅதிகாரம் இருக்கிறது. அரசமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால்தற்போது தேர்தல் இடம்பெறுவது தாமதித்திருக்கிறது.

நிறைவேற்று அதிகாரிக்கு (ஜனாதிபதிக்கு) தேவையான முறையிலேயே நாட்டில் தேர்தல் இடம்பெறவேண்டும் என்ற செய்தியே தற்போது எமக்குவழங்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் காலத்தில் உள்ளூ ராட்சிமன்றதேர்தலைநடத்து வதா, நாடாளுமன்றத் தேத்தலைநடத்துவதா என்று நிறைவேற்று அதிகார நபரே (ஜனாதிபதியே) தீர்மானித்து அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஆட்சியாளருகளுக்கு தேவை யானமுறையில்நாட்டைவழி நடத்துவதையே காண்கி றோம்.

நாட்டில் பொருளாதார பிரச்சினை இருப்பதை நாங்கள்ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதாரத்தை கட்டி யெழுப்ப அனைவரும் ஒத்து ழைப்பு வழங்கவேண்டும். ஆனால் இந்த பொருளாதார நெருக்கடி நாங்கள் ஏற்ப டுத்தியது அல்ல. ஆட்சியா ளர்களே நாட்டில் உரப்பிரச் சினையை ஏற்படுத்தினார் கள், எரிபொருள், எரிவாயு பிரச்சினையை ஏற்படுத்தி னார்கள் தற்போது அதற்கு தீர்வை தேடுகின்றனர்.

அதனால் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு தங்களுக்கு தேவையான முறையில் நாட்டை ஆட்சி செய்ய இடம ளிக்குமாறு இவர்களுக்கு தெரிவிக்க முடியாது. இவர்களின் முறையற்ற நிர்வாகமே இந்த பிரச்சினை கள் ஏற்படுவதற்கு காரண மாகும். அதனால் ஆட்சியா ளர்களின் இவ்வாறான தீர்மானங்களுக்கு எதிராக மக்கள் வீதிக்கிறங்கும்போது அதனை தடுப்பதற்கே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலங்கள் போன்ற சட்டங்களை கொண்டுவர இந்த ஆட்சி முயற்சிக்கிறது - என்றார்.

## இந்தியாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து மருந்துகளும் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டன. 48 மணித் தியாலங்களின் பின்னர் கிடைத்த அறிக்கைக்கு அமைய, நோய்த்தொற்றுக்கு ப்ரெட்னிசோலோனே கார ணமாக உள்ளமை கண்ட றியப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள் ளப்பட்ட சிகிச்சை நிலையங் களில்கிருமிகள் இருக்கலாம் என்ற அடிப்படையில், கண் வைத்தியசாலையை தற்கா லிகமாக மூடுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை தேசிய கண்வைத்திய சாலையின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்ச்சைக் குள்ளான கண் மருந்தைப் பயன்படுத்துவதுமட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும்நுவரெலியா வைத்தி யசாலை ஆகியவற்றில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய வைத்தியசா லைகளிலிருந்து எவ்வித மான அறிவிப்பும் வெளியி டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முழு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இந்த தமிழ் தரப்புகள் புதுப்புது அமைப்புக்களை உருவாக்குவதற்கு முதலே இவற்றுக்கு எதிராக போரா டிக்கொண்டிருக்கிறஒருஅமைப் பாக நாங்கள் இருக்கிறோம். பத்துப் பேர் சேர்ந்தால் தான் அமைப்பு உருவாக்கலாம் அல்லது போராடலாம் என்கிற ஒரு தேவை எங்களுக்குக் கிடையாது.

நாங்கள் இந்த விடயங் களை எதிர்க்கவேண்டும் என்று முடிவெடுத்தால் வேறு யாருடைய உதவியையும் தேடாமல் நேரடியாக மக்க ளிடம் இந்த விடயங்களை கொண்டு போவோம். அவ்வாறு செய்து பல போராட்டங்களைநடாத்தியும் இருக்கிறோம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல், காணி பறிப்பு, அரசியல்கைதிகள் விவகாரம் உள்ளிட்டவற்றில் அமைப்பு உருவாக்கிவிட்டு போராடப் போவதாகஇன்றைக்குஇந்தத் தரப்புக்கள் அறிவிப்பதுதான். இந்த அனைத்து அநியாயங் களையும் செய்யக் கூடிய ஓர் அரசமைப்பை அதாவது ஒற்றை ஆட்சி அரசமைப்பை இவர்கள் ஆதரிக்கிறாரகள். அதிலும் தமிழர்களுடைய தீர்வு விடயத்திலே தற்போது இருக்கக்கூடிய 13வது திருத்தத்தைதான்தொடர்ந்தும் வைத்திருக்கச் சொல்லி இவர்கள் கேட்கிறார்கள். ஆனால் அந்த 13ஆவது திருத்தத்திற்குள் வடக்கு கிழக்கிற்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள்அனைத்தையும் உத்தியோகபூர்வமாககொழும் பில் இருக்கிற அரசாங்கத் துக்கு வழங்கிய சட்டமாக தான் அது இருக்கிறது.

ஆகவே ஒரு பக்கம் அநியாயத்துக்கு எதிராகப் போராடுவதாக மக்களை ஏமாற்றிக்கொண்டு மறுபக் கம் இவை அனைத்தையும் செய்வதற்கு உத்தியோகபூர் வமாக, சட்டரீதியாக செய்வ தற்கு அனுமதி வழங்குகிற ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய13ஆம்திருத்தத்தையும் இவர்கள் ஆதரிக்கிறார்கள்.

இப்படிபட்ட தரப்புகளோடு நாங்கள் சேர்வது எங்கள் மக்களைநாங்களும்முட்டாள் களாக்கும் ஒரு செயற்பாடா கத்தான் இருக்கும். மாறாக இதை மக்களுக்கு தெளிவு படுத்தி உண்மையிலேயே இந்த நடவடிக்கைகளில் யார் ஆக்கபூர்வமாக இருக்கிறார் கள் என்பதை மக்கள் அறியக்கூடிய ஒரு சூழலை தொடர்ந்தும் ஏற்படுத்துவது தான் பொருத்தமானதாக இருக்கும்எனநினைக்கிறேன - என்றார்.

இந்த நீண்ட விளக்கத் திற்குப் பின்னரும் செய்தியா ளர்கள் அடைப்புப் போராட்டத் திற்கு உங்கள் கட்சி ஆதரவா இல்லையா என மீளவும் கேட்கப்பட்டதற்கு அது எங்க ளோடு சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் அல்ல என்று நழு வல் பதிலளித்தார்.

## தேசிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. அவ்வாறு அதிகரிக்க வேண்டுமானால் தேசிய ஆட்சியை அமைக்க வேண்டும்.

தற்போதைய நிலையில், பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குஅமைச்சு பதவிகளை வழங்கி அவர் களை திருப்திப்படுத்த வேண் டியுள்ளது. அதற்காக தேசிய ஆட்சியை அமைப்பது பற்றிக் கரிசனைகொள்ளப்பட்டுள்ளது.

அச்செயற்பாட்டிற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன துணைபோகின்றார். அவரே தேசிய ஆட்சியை அமைக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதர வளிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு முன்னதாகவே மைத்திரிபால சிறிசேன இந்த ஆட்சியில் இணையவுள்ளார்.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் தான் சிறை செல் வதைதடுப்பதற்காகவேதேசிய ஆட்சிஅமைப்பதில்அவர்அதிக அக்கறை கொண்டுள்ளார் - என்றார்.

## திட்டமிட்டே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார சபையின் பொறி யியலாளர் சங்கம் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, ஆட்சியா ளர்களல் நடைமுறைப் படுத்தப்பட்ட வரித்திருத்தத் திற்கு எதிர்ப்பு தெரிவித்து, தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப் பினராகிய நாம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெ டுத்தோம். ஆட்சியாளர்கள் எம்முடன் பேசுவதாகக் கூறி னர். ஆனால் இதுவரையில் அதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தவில்லை.

வரிசெலுத்துவதற்கு நாம் தயாராக உள்ள போதிலும் ஆட்சியாளர்களின் வரித்திருத் தம் ஏற்புடையதாக இல்லை. ஆகவே ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

வரித்திருத்தம்தொடர்பான இடைக்கால தீர்வை நாம் முன்வைத்துள்ளோம். ஆன போதிலும் உரிய தீர்வை வழங்குவதற்கு ஆட்சியா ளர்கள் நடவடிக்கை எடுக்க வில்லை - என்று பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த கூட்டம் சம்பந்தமாக ஊடகங் களுக்குக் கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின்செயலாளர்வைத்தி யர் ஹரித்த அளுத்கே,

நாம், ஜனாதிபதியுடன் கலந்துரையாடும்வாய்ப்பைக் கோரியிருந்தோம். இது வரையில் அதுபற்றி எவ்விதமான பதிலும் கூறப் படவில்லை. வரித்திருத்தம் சம்பந்தமாக இடைக்காலத் தீர்வினையும் முன்மொ ழிந்துள்ளோம். அதற்கும் பதிலளிக்கவில்லை.

இந்த நிலையில் நாம் அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில்ஆராய்ந்துவருகின் றோம். எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறை வேற்றிக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எதிர் காலத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதுமட்டுமன்றி அடக்கு முறையை எங்கு பயன் படுத்தினாலும் அதற்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதெனவும் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு என்ற வகையிவல் தீர்மா னத்துக்கு வந்துள்ளோம் - என்றார்.

## குரங்குகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரிதப்படுத்தவேண்டும் என் பதில் மனித உரிமைகள் ஆணைக்கு தலையிட வேண்டும் என்பதற்காகவே ஆணைக்குழுவை நாடி யுள்ளோம். தொழிற்சங்க போராட்டத்தால் எமது பிள்ளைகளின் மனித உரிமைகள் மீறப்படுகின் றன. உரிய காலத்திற்குள் கல்வி செயற்பாடுகளை அவர்களால் முழுமைப்படுத்த முடியாத நிலை காணப்படு கிறது - என்றார்.

## எம்மை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்களின்சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் மூத்த விரிவுரையாளர், சாருதத்த இலங்கசிங்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:

நாட்டின் தலைவர் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தொன்றை வெளியி டுவதை நாம் பகிரங்கமாக கண்டுள்ளோம். துப்பாக்கியை தலையில் வைத்து துப்பாக்கி தாரியொருவர் சத்திர சிகிச்சை மேற்கொள்ளுமாறு கூறி னாலும், எந்த நரம்பை வெட்டுவதென்று வைத்திய ருக்கே தெரியும். விடைத் தாளைவழங்கிஅதனைசரியா தவறா என்று பார்க்குமாறு துப்பாக்கிதாரியால் கூறலாம். ஆனால் துப்பாக்கிதாரிக்கு விடைத்தாள் சரியா தவறா என்பது தெரியாது.

விடைத்தாள் மதிப்பீடு தொடர்பில்பலசுற்றுப்பேச்சுக் கள் முன்னெடுக்கப்பட்டு முன்னேற்றங்கள் காணப்பட் டுள்ள நிலையில் நாட் டின் தலைவர் விரிவுரையா ளர்களையும், ஆசிரியர் களையும் கோபப்படுத்த முனைகின்றார்.

ஆட்சியாளர்கள்விரிவுரை யாளர்களினதும் ஆசிரியர் களினதும் சொத்துகளைக் கையகப்படுத்துவதற்கு முன்னர், நாட்டை வங்கு ரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற மத்திய வங்கி கொள்ளையர்களிடம்இருந்து அந்தநிதியைமீளப்பெற்றிருந் தால் தற்போது இந்தநிலை ஏற்பட்டிருக்காது. ஆகவே, விரிவுரையாளர்களை அச்சுறுத்திஅடிபணியவைக்க முடியாது. அத்துடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வினைக் காணவும்முடியாது - என்றார்.

## நல்லூரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட கும்பலே இந்தத் தாக்குதை நடத்தியதாக உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. காரில் வந்திறங்கிய இந்தக் கும்பல் விடுதியின் முன்புறக் கண்ணாடிகளைஉடைத்தும் அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களைத் தாக்கியும் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

பின்னர் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து உரிமையாளர் மீது சாணித் தண்ணி ஊற்றியுள்ளனர். அங்கிருந்த சிசிரிவி பதிவுக் கட்டுப்பாட்டுத்தொகுதியையும் தம்முடன் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர். .

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

## ஜனநாயகத்தின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சபை உறுப்பினர்கள் இன்றைய தினம் அஸ்கிரிய மற்றும் மல்வத்து ஆகிய மகாநாயக்க தேரர்களை சந்தித்தனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அவர்களின்கோரிக்கைக் குப் பதிலளித்த அஸ்கிரிய மாகாநாயக்க தேரர் வரக்கா கொட ஸ்ரீ ஞானரதன, ஜனநாயக உரிமைகளை பயன்படுத்திக் கொண்டு ஒரு தரப்பினர் ஆட்சிக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சித்தால் அதற்கு இடமளிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

வர்த்தமானியில் வெளி யிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புசட்டமூலம்தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொண்டன் பின்னர் உத்தியோகபூர்வதீர்மானத்தை கூட்டாக அறிவிப்போம் என அஸ்கிரிய மகாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார் என்றும் நாடாளுமன்றஉறுப்பினர்கள் செய்தியாளர்களிடம் தெரி வித்தனர்.

மல்வத்து மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்ததன் பின்னர் டலஸ் அணியினர் அஸ்கிரி மகாநாயக்கதேரர்வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் கருத்து தெரிவித்த அஸ்கிரிய மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீஞானரத்ன தேரர் மேலும் தெரிவித்ததாவது:

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் ஜன நாயகம்,அடிப்படை உரிமை கள் ஆகியவற்றுக்கு எதிரான ஏற்பாடுகள்காணப்படுமாயின் அது தொடர்பில் நாடாளு மன்றத்திலும்,வெளியிலும் மக்களுக்கு எடுத்துரைப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

நாட்டின் ஜனநாயகம் மற்றும் கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில்மாற்றுக்கருத்துக்கள் ஏதும் இல்லை. சுதந்திரம் என்பதைமுன்னிலைப்படுத்தி தோற்றம் பெறும் பிரச்சி னைகள் தொடர்பில் விசேட கவனம்செலுத்த வேண்டும்.

ஜனநாயக உரிமை களைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு தரப்பினர் ஆட்சிக்கு எதிரான செயற் பாடுகளை முன்னெடுக்க முயற்சித்தால் அதற்கு ஆட்சி யாளர்கள் இடமளிக்க முடியாது. அரசநிர்வாகத்தை முன்னெடுத்து செல்ல ஆட்சியாளர்கள்ஒருசிலசட்டங் களைகாலத்தின் தேவைக்கு ஏற்ப இயற்றவேண்டும்.

இன்று எதிர்க்கட்சியாக செயற்படும் தரப்பினர் கடந்த காலங்களில் ஆட்சியில் இருக்கும்போது பல சட் டங்களை உருவாக்கி னார்கள், அப்போது மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளைஅவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சட்டம்இயற்றுவதற்குஎதிர்ப்பு தெரிவிக்கவேண்டும். வர்த்தமானியில்வெளியிடப் பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புசட்டமூலம்தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.சட்ட ஆலோசனைகளைபெற்றுக் கொண்டன்பின்னர்உத்தியோ கபூர்வ தீர்மானத்தை அறிவிப்போம் - என்றார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபில் ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிரான ஏற்பாடுகள் காணப்படுமாயின் உயர்நீதிமன்றத்தைநாடுவது சிறந்த வழிமுறையாக இருக்கும் என அஸ்கிரிய மகா விகாரையின் செயலாளர் பேராசிரியர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

## திருச்சபை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவைப் பெறுவ தற்கான முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டதாக அறியக்கிடைக் கின்றது.

உண்மையில்இந்ததடை உத்தரவு பெறப்படுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளின் நோக்கம் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளாக நீதி நிலைநாட் டப்படாமையினால் தான் தற்போது நீதி கோரி அமைதிப்பேரணியை முன்னெடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஆட்சி யில் இருந்த அரசாங்கங்கள், ஜனாதிபதிகள் சரியாகச்செயற் பட்டிருந்தால்தற்போது வீதிக்கு இறங்கிபேரணிகளைநடத்தும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

மேலும் நீதிகோரி பேரணியை முன்னெடுக் கின்றபோது தற்போதைய ஜனாதிபதிக்கோ, அதிகாரி களுக்கோ பிரச்சினைகள் இல்லை. அவர்கள் அதனை ஏன்கரிசனைகொள்கின்றார்கள். அவ்வாறானால் உண்மை வெளிப்பட்டு விடும், குற்றவா ளிகள் அடையாளம் காணப் பட்டுவிடுவார்கள்என்றஅச்சம் கொள்கின்றார்களா?

விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளி களை வெளிப்படுத்த முடி யாத நிலைமை காணப்படு கின்றமைக்கான காரணத் தினைஜனாதிபதியும், அதிகாரி களும் பகிரங்கமாகக் கூற வேண்டும் என்றார்.

## பதிலடிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது பிரச்சினைகள் தொடர் பில் பேச்சு நடத்தி முன்னேற் றங்களை கண்பதற்கு முயற்சிக்கின்றார். இந்தச் சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆசிரியர் களையும், விரிவுரையா ளார்களையும் அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவ்வாறு கருத்துக்களை வெளியிடுவ தற்கு அவருக்கான அதிகாரத் தினை வழங்கியது யார்?

அவர், ஆசிரியர்களை யும், விரிவுரையாளர்களை யும் அடிபணியச் செய்து விடைத்தாள் மதிப்பீடுப் பணியை முன்னெடுப்பற்கு முயற்சிப்பாராயின் அவரது போக்கிற்கு பதிலடியை வழங் குவதற்குநாமும்தயாராகவே உள்ளோம்.

ஜனாதிபதி ரணில், ஆசிரியர்கள் மற்றும் பல்க லைக்கழக விரிவுரையா ளர்களுக்குஎதிராக பொதுமக் களை திசை திருப்புவதற்கே இவ்வாறு தெரிவித்துள்ளார் - என்றார்.







# பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான காகிதாதிகளை இந்தியா வழங்கியது!

இந்திய அரசின்உதவி யோடு பாடப் புத்தகங்கள் அச்சிடுவதற்கான பெருந்தொகையான காகிதாதிகள் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனை கல்வி அமைச்சின் மஹரகம களஞ்சியசாலையில் கையளிக்கும் மற்றும் கையேற்பு வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் இந்திய அரசின் சார்பில் கலந்துகொண்ட இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# மித்தரமுல்ல படுகொலைச் சம்பவம்: படை முகாம் துப்பாக்கிகளுக்கு சீல்

அஹுங்கல்ல- மித்தரமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கரந்தெனிய இராணுவ ஆயுத புலனாய்வுப் படைப் பிரிவு முகாமில் புத்தாண்டு தினத்தன்று சேவையில் ஈடுபட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 36 துப்பாக்கிகள் பொலிஸாரால் பொறுப்பேற்கபட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி மாலை அஹுங்கல்ல - மீத்தரமுல்ல பகுதியில் நபரொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த மோப்பநாய் குறித்தமுகாமிற்குள்நுழைந்ததன் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக இந்த ஆயுதங்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகபொலிஸ்ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அஹுங்கல்ல - மீத்தரமுல்ல அமரமோலி மாவத்தையைச் சேர்ந்த தரிந்து தனுஷ்க சில்வா எனும் நபர் கடந்த 14ஆம் திகதி தனது சகோதரியின் இரு பிள்ளைகளுடன்மோட்டார்சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது மற்றுமொருமோட்டார்சைக்கிளில் வந்த அடையாளந் தெரியாத இருவரினால்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போதுகாயமடைந்தநபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுபின்னர்சிகிச்சை பலனின்றிஉயிரிழந்தார். துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்த 5 வயது மற்றும் ஒன்றரை வயது சிறுவர்கள் காயமடைந்த நிலையில் பலப்பிட்டியவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராணுவ புலனாய்வுப் படை முகாமுக்கு அருகில் உள்ள கறுவாத்தோட்டத்துக்குஅருகில்இருந்து கடந்த 15 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் தீயணைப்பு வாகன சில்லினுள் சிக்குண்ட தீயணைப்பு வீரர் வைத்தியசாலையில் சேர்ப்பு

யாழ் மாநகர சபையின் தீயணைப்பு வாகன சில்லினுள் சிக்குண்ட தீயணைப்பு படை வீரரொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் செவ்வாய்க் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, தீயணைப்பு வாகனம்ஹான்ட்பிரேக்போடப்படாமல் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாகனம் மெதுமெதுவாகநகரவே அதனை கண்ட தீயணைப்பு படை வீரரொருவர் அதனை நிறுத்துவதற்காக கல் ஒன்றை சில்லுக்கு முன்பாக வைக்க முயன்றுள்ளார். இதன் போது சில்லுக்குள் அகப்பட்டு காயமடைந்தார்.


காயமடைந்த தீயணைப்பு படை வீரர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# அநுராதபுரத்தில் ஒரு கடையில் ஏற்பட்ட தீ பல வர்த்தக நிலையங்களுக்குப் பரவியது

அநுராதபுரம் மார்க்கெட் பிளேஸில் உள்ள கட்டடத் தொகுதியில் உள்ளபலவர்த்தகநிலையங்களில் நேற்று (வியாழக்கிழமை) தீபரவல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்த அநுராதபுரம் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ வேகமாக பரவியதாகவும், ஒரு கடையில் ஏற்பட்ட தீ அருகில் உள்ள பல கடைகளுக்கும் பரவியதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.



# கொழும்பு பஞ்சிகாவத்தையில் பொலிஸ் வாகனத்துக்கு தீ

## மூவர் கைது

கொழும்பு பஞ்சிகாவத்தை பகுதியில் கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி பொலிஸ் வாகனம் தாக்கப்பட்டு அதன் பாகங்கள் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வர்த்தக குற்றப் புலனாய்வுப்பிரிவினரால்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாளிகாவத்தைமற்றும்கொழும்பு 12 ஆகிய இடங்களில் வசிக்கும் 18, 31மற்றும் 46 வயதுடையவர்களே கைதானவர்களாவர். சந்தேகநபர்கள் நேற்று (வியாழக் கிழமை) மாளிகா கந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



# அரச வைத்தியசாலைகளுக்கு 1320 வைத்தியர்கள் நியமிப்பு

நாடளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்குஎதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 1320 புதிய வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாகபெருமளவானநியமனங்கள் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சினால்வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தற்போது நாட்டில் சுமார் 19 ஆயிரம் வைத்தியர்கள் காணப்படுகின்றனர்.புதியநியமனங்களுடன் இந்தஎண்ணிக்கை20 ஆயிரமாக உயர்வடையக் கூடும்.

கடந்த காலங்களில் நாட்டில் பொருளாதார பிரச்சினைகள் இருந்த போதிலும், ஒரே நேரத்தில் அதிகளவான வைத்தியர்களை நியமிக்க முடியும் என்பது இலவச சுகாதாரசேவையில்பாரியசாதனை எனசுகாதார அமைச்சர்கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஆண்டுதோறும் மருத்துவக் கல்விக்காக இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1500 முதல் 1800 வரை காணப்படுகிறது.

இதனை 5000 வரை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.இதன்மூலம்இனி வரும்காலங்களில்சுகாதாரத்துறையில்பாரியவளர்ச்சிஎதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கெஹலிய தெரிவித்துள்ளார்.எதிர்வரும் 25 ஆம்திகதிமுதல்நாடளாவியரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் நாட்டின் சுகாதாரத் துறையில் முதுநிலைப் பட்டதாரிகளாக இணைந்து கொள்ளவுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பேசித் தீர்வு காண்பதே சிறந்தது

கல்வி மற்றும் பரீட்சை நடவடிக்கைககளை அத்தியாவசிய சேவையாக அறிவித்துவிடுவேன் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு மிரட்டல் விடுத்திருந்தார். அது இப்போது அவருக்கு எதிராகவே பற்றி எரியத் தொடங்கியிருக்கின்றது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை விடைத் தாள்களைத் திருத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைக் கருத்தில்கொண்டே அரசுத் தலைவர் அதனைத் தெரிவித்திருந்தார். தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் விடைத்தாள்கள் திருத்துவதற்கான கொடுப்பனவுகள் போதாது என்ற அடிப்படையிலேயே ஆசிரியர்கள்முதலில்விடைத்தாள்கள்திருத்துப்பணிகளைச் செய்ய முடியாது என்றார்கள்.

கல்வி அமைச்சருடன் நடத்திய பல சுற்றுப் பேச்சுக்களில் இது தொடர்பான ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது. விடைத் தாள்களைத் திருத்துவதற்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்கும் நீண்ட தூரத்திலிருந்து வருபவர்களுக்கு அதிகரித்த போக்குவரத்துக் கட்டணங்களை வழங்குவதற்கும் இணக்கம் எட்டப்பட்டது.

இருப்பினும் விடைத்தாள்களைத் திருத்துவதற்கான பணிகளைத் தொடங்க வேண்டுமானால் தமது கோரிக்கைகள் தொடர்பில் ஆட்சியாளர்கள் தம்முடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் வலியுறுத்துகிறார்கள். அரசின் புதிய தனிநபர் வரிக் கொள்கையை மீள்பரிசீலனை செய்து நியாயமான வரி விதிப்பு இடம்பெறவேண்டும் என்பது உட்படச் சில கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் ஒரு மாத காலத்திற்கு வகுப்புக்களைப் புறக்கணித்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடன் அவர்களது கோரிக்கைகள் குறித்து ஆட்சியாளர்கள் பேசவேயில்லை.

இதனால் தமது போராட்டத்தை இடைநிறுத்தியபோதே எம்மோடு பேச்சு நடத்தப்படும்வர விடைத்தாள்களைத் திருத்தச் செல்லமாட்டோம் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் அறிவித்துவிட்டது. இதைத் தொடர்ந்தே கல்வி நடவடிக்கைகளை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்திவிடுவேன், மாணவர்களின் எதிர்காலத்துடன் யாரையும் விளையாட அனுமதிக்கமாட்டேன் என்றெல்லாம் அரசுத் தலைவர் அறிவித்தார்.

நாட்டில் எல்லாக் காரியங்களையும் அத்தியாவசிய சேவையாக அறிவித்துக் கொண்டு நடத்திவிட முடியும் என்று அரசுத் தலைவர் நினைப்பாரானால் அது போன்ற முட்டாள்தனம் வேறு எதுவுமில்லை. அனைத்துத் தொழிற்தரப்பினரும் இணைந்து முடிவெடுத்து சேவைகளை நிறுத்தினால் என்னவாகும் என்பதற்கான மாதிரி ஏற்கனவே அரசுத் தலைவருக்கு காட்டப்பட்டிருக்கிறது. அதையடுத்து சற்று இறங்கி வந்திருந்த அவர், பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடன் கிடைத்த பின்னர், வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுவது போன்று மிரட்டத் தொடங்கியிருக்கிறார்.

மாணவர்களின் எதிர்காலம் மிக முக்கியமானதுதான். அதனைப் பகடையாக வைத்து விளையாடக்கூடாது என்பது பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குத் தெரியாதது அல்ல. அவர்களை அந்த நிலையை நோக்கித் தள்ளக்கூடாது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து வைத்திருப்பதும் அவசியம். அவர்களது கோரிக்கைகள் குறித்து அவர்களைச் சந்தித்துப் பேச்சுக்கூட நடத்தாமல் புறக்கணிப்பது மிக மோசமான செயல். அதன் விளைவாக ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கான பொறுப்பை அரசுத் தலைவரே ஏற்றாகவேண்டும். உரிய வகையில் பேச்சு நடத்தப்பட்டால் இந்தப் பிரச்சினை ஒரு சுமுகமாக தீர்வுக்கு வர வாய்ப்பிருக்கின்றது. அதற்கு மறுத்து அடம்பிடிப்பது ஆட்சியாளர்களுக்கு அழகல்ல.

எல்லாத் தவறுகளுக்கும் எதிர்க் கட்சியே காரணம் என்று கூறும் அரசியலை இந்த விடயத்திலும் பின்பற்ற அரசுத் தலைவர் முனையக்கூடாது. பல்கலைக்கழக ஆசிரியர்களுடன் உடனடியாகப் பேச்சு நடத்தி தீர்க்கக்கூடிய இந்த விடயத்தை மிரட்டல் விடுத்து மேலும் பெரிய பிரச்சினையாக்கிக்கொள்ளாமல், பேசித் தீர்வு காண்பதே சிறந்தது.

# அக்குறணை சம்பவத்துக்கும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கும் தொடர்புகள் உள்ளனவா?

## இம்ரான் எம். பி. கேள்வி



அக்குறணை சம்பவத்துக்கும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கும் தொடர்புகள் உள்ளனவா என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ரமழான் மாதத்தின் 27 ஆம் நாள் இரவில் புனித லைலத்துல் கத்ர் இரவை எதிர்பார்த்து தமது வணக்க வழிபாடுகளை முன்னெடுக்க முனைந்த நேரத்தில் அக்குறணை பகுதி பள்ளிவாயலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக வந்த தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பொலிஸாருக்கு வந்த அநாமதேய அழைப்பால் இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில்கொண்டு உடனடியாக செயற்பட்ட பாதுகாப்பு தரப்புக்கு நாம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அதே நேரம் ஒரே ஓர் அநாமதேய அழைப்பு அல்லது அநாமதேய கடிதம் எந்தவொரு சமூகத்தின் விஷேட நிகழ்வுகளையும் சீர்குலைக்கும் நிலைமையை நாம் அனுமதிக்கவும் கூடாது.

இதே நிலைமை நாளை ஒரு பெரஹர நிகழ்வுக்கோ அல்லது வேறு சமய நிகழ்வுக்கோ நடக்க நேர்ந்தால் அந்த நிகழ்வுகளை நிறுத்துவது ஒருபோதும் தீர்வாக மாட்டாது.

வலி நிறைந்த ஈஸ்டர் தாக்குதல் நினைவை மீட்டும் நாள்களில் இப்படியான மன உளைச்சலுக்குரிய நிகழ்வுகள் நடப்பது பலத்த சந்தேகத்தை தருவதும் தவிர்க்க முடியாதது.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னால் பாரிய அரசியல் பின்னணிகொண்ட சதி இருந்ததாக இன, மத வேறுபாடின்றி மிகப் பெரும்பாலான இலங்கை மக்கள் நம்புகின்றனர்.

அக்குறணை சம்பவத்தின் பின்னணியில் அச்சப்படும்படியாக ஏதுமில்லை என்று அரச தரப்பு அமைச்சர்கள் கூறினாலும் கூட இந்த சலசலப்பும் அதிர்வலையும் உருவாக வேண்டுமென்ற நோக்கம் இதன் பின்னணியில் உள்ளதா என்ற கேள்வி எம்மிடம் எழுவது இயல்பானதே. ஒரு சமூகத்தின் சந்தோஷத்தை சீர்குலைக்கும் விஷமத்தனம் இதன் பின்னால் உள்ளதா? அல்லது ஜனநாயக விரோதமான கொடுங்கோன்மை சட்டமான உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொண்டுவரப்பட அரசு தயாராகும் நிலையில் அதற்கு ஏற்றாற்போல் சமூக நிலைமையை கட்டமைக்கும் கைங்கரியம் இதன் பின்னணியில் உள்ளதா? என்ற சந்தேகம் பலமாக மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை ஒரு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் என்னிடம் இன்று மட்டுமே மக்களிடமிருந்து வந்த கேள்விகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

எனவே இன, மத வேறுபாடின்றி எல்லா மக்களதும் பாதுகாப்பை உறுதிசெய்வதும் இதன் பின்னணியில் ஈஸ்டர் தாக்குதல் போன்ற சதிகள் இருந்தால் அவற்றை முறியடிப்பதும் அவ்வாறின்றி விஷமத்தனமான பொறுப்பற்ற நடவடிக்கைகள் காணப்பட்டால் கடுமையான நடவடிக்கைகளை அவற்றுக்கெதிராக எடுப்பதும் அரசாங்கத்தின் முன்னுள்ள முதன்மை பொறுப்புகளாகும். - என்றார்.

# அரசுக்கு பணம் சேர்க்கும் செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகள் ஈடுபடவே கூடாதாம்

## வலியுறுத்துகின்றார் சாணக்கியன்



தொடர்ந்தும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளக்கூடாது என்பதில் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்துக்குப் பணம் சேர்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகள் ஈடுபடக் கூடாதென நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

மண்முனை பற்று தென்எருவில் பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுத் தருவதற்கே செயற்படுத்தப்பட வேண்டும்.

மாறாக, அவர்களுக்கு அந்தத் திட்டங்கள் பாதகமாக அமையக் கூடாது என்பதுடன் அரசியல்வாதிகள் அதற்குத் துணைபோகக் கூடாது.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்காகக் கொண்டுவரப்படும் திட்டங்கள் மக்களுக்கு நன்மை பயக்குமாறே அமையவேண்டும்.

மக்களைச்சுரண்டி இலாபம் உழைக்கும் திட்டங்கள் எமக்குத் தேவையில்லை. எனவே அரசாங்கத்துக்கு இலாபம் உழைக்கும் திட்டங்களை அரசியல்வாதிகள் ஊக்கப்படுத்தக்கூடாது.

அதேவேளை அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபம் கருதியும் குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடாது.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் எனது எதிர்ப்புக்களைத் தொடர்ந்தும் வெளியிடுவேன்.

உதாரணமாக தென்எருவில் பற்று பிரதேசத்தில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வந்த படகுப்பாதைக்கு பணம் அறவிடப்படவில்லை. ஆனால்தற்போது திடீரென மக்களிடம் 50 ரூபா பணம் அறவிடப்படுகின்றது.

நாம் பணம் அறவிட வேண்டாம்எனக்கூறவில்லை. தற்போது காணப்படுகின்ற நெருக்கடி நிலைமையின் மத்தியில் மக்களிடம் பணம் அறவிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாம் பணம் அறவிட வேண்டாம்எனக்கூறவில்லை. ஆனால்புதியபடகுப்பாதையை அமைத்த பின்னர் பணம் அறவிடுவதில் எந்தப் பிரச்சினையும் எமக்கு இல்லை.

தற்போதுள்ள அந்தப் படகுப் பாதையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. பல வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக இந்தவிடயத்தில் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதிகமாக பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வோர், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதுவரை காலமும் இலவசமாக முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த படகுப் பாதைசேவைக்குஏன்தற்போது பணம் அறவிடப்படுகின்றது.

ஒருசில அரசியல்வாதிகள் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கு இலாபமுழைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

எனவே தற்காலிகமாகவேனும் இந்தப் படகுப்பாதை விடயத்தில் பணம் அறவிடுவதை நிறுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது.

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் மற்றும் உரிய அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெறக் கூடாதென்பதில் கவனமாக இருக்கவும் வேண்டும் என்பதுடன் குறித்த விடயத்தில் மட்டுமல்ல அனைத்து திட்டங்களிலும் ஊழல் மோசடிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

ஒருதிட்டம் மக்களுக்காகக் கொண்டுவரப்படுகின்றபோது அது மக்களது நலன்சார்ந்ததாக அமைய வேண்டும்.

இந்தப்பணம்வசூலிக்கும் முறை மூலம் இந்தப் பாதையூடாகப் பயணத்தை மேற்கொள்ளும் மக்களே அதிக சிரமங்களை எதிர்கொள்வார்கள்.

பொறுப்புவாய்ந்த அமைச்சர் மற்றும் அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற வகையில் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலையிட்டு இந்த விடயத்தில் முடிவுகளை எடுக்கவேண்டும்.

ஆனால் இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தில் எந்த முடிவுகளையும் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே உடனடியாக இந்த பணம் அறவிடும் செயற்பாடுகளை நிறுத்தி அதற்கான மாற்று ஏற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாகத் திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும்.

வெறுமனே மக்கள் பணத்தை வீணடிக்கும் அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

மக்களைப் பாதித்து அவர்களிடம் வசூலிக்கும் பணத்தை அரசாங்கத்துக்கு அனுப்பி நல்ல பெயர் எடுப்பதற்கு எவரும் முயற்சிக்கக் கூடாது. அதற்கு நாம் அனுமதிக்கப்போவதுமில்லை.

இந்த விடயத்தில் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் பிரதேச செயலாளர் உரிய முடிவுகளை எடுக்க வேண்டும். அத்துடன் இந்தப் பணம் வசூலிக்கும் நடைமுறையை முன்னெடுக்க முடியாதென்பதை உரிய தரப்பினருக்கும் எடுத்துக்கூற வேண்டும்.

தொடர்ந்தும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளக்கூடாது என்பதில் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மேலும் குறிப்பிட்டுள் ளார்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உடையார் எனப்படுவது ஊக்கம்

அரியமானிடப்பிறவியில் அவதரித்துள்ளநாம் நம் வாழ்வில் வெற்றியின் வெளிச்சத்தைக் கண்ணுறஆசைகொள்ளுவோமானால் நாம் கற்கவேண்டியவித்தைவிடாமுயற்சிஆகும்.

**"உடையார்எனப்படுவதுஊக்கம்அஃது இலார் உடையதுஉடையரோமற்று"**

எனும் வள்ளுவப் பெருந்தஷ்கையின் வாக்கைவிரித்துரைப்பதேநமதுகட்டுரையின் நோக்கமாகும். எமதுவாழ்வில் ஒரேஒருபொருளையே "உரிமை"என்று கூற முடியும். அதுவேஊக்கம் எனும் பெரும் சொத்துவள்ளுவர் ஊக்கமுடைமைஎனும் அதிகாரத்தைவகுத்துஅமைவதுமுயற்சியின் முக்கியத்துவத்தைமாந்தர்க்குஎடுத்துரைப்பதேஎனலாம்.

**"தெய்வத்தால்ஆகாததெனினும்முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்"**

எனும் குறளும் மனிதனின் பலம் நம்பிக்கையின் ஊக்கமுமேஅன்றி இறைவனின் அருளைநம்பியிருப்பதல்லஎனஉரைக்கிறது.

"எறும்பூரக் கற்குழியும்"என்றுரைத்தஆன்றோரைஉரிமைகொண்டாடும் தமிழினம் உழவுத்தொழிலால் உழைப்பையும் முயற்சியையும் ஒருபடிமேல் கொண்டுசென்றுநிறுத்துகியார்கள்.பண்டைய இலக்கியங்கள்தொட்டுபாரதியையும்தாண்டிதற்காலக் கவிஞரானவைரமுத்துவரைஉழைப்பைவாசகர்க்குஉணர்த்தாதோர் இல்லை.

**"சுடும் வரைநெருப்பு**
**சுற்றும் வரைபூமி**
**உழக்கும் வரைமனிதன் ;நீமனிதன்"**

ஏரின் பின்னால் உழன்றுகொண்டிருக்கும் பூமியல் உழைத்துவாழும் வரையில்தான் உங்களுக்குமனிதன் எனும் அந்தஸ்து எனக்கூறும் வைரமுத்துவின் வரிகள் ஞாபகத்துக்குவருகின்றன.உழைப்புஎன்றபாதையில் நடக்கத் துணிந்தவனுக்குவெற்றிஎன்னும் கதவுதிறந்து இருக்கும் என்பதுதிண்ணம் .முயற்சிஎன்றஒன்றைமட்டும் மூச்சுப்போலசுவாசிக்கச் சொல்லும் பாடல்கள் ஒன்றும் புதிதல்ல.

**"முயற்சிகள் என்னைக் கைவிட்டதுண்டு. ஆனால் முயல்வதைநான் ஒருபோதும் கைவிட்டதில்லை"**

என்றுஉலகிற்குஒளியூட்டியவிஞ்ஞானி தோமஸ் அல்வாஎடிசனின் மொழியின் அர்த்தத்தைவிளங்கிக்கொள்ளுங்கள் .அரசன் முதல் ஆண்டிவரைமுயற்சிஎன்னும் ஆயுதத்தைக் கொண்டுபோரிடலாம்.இராஜ தந்திரங்களில் நுண்ணியபாதைகளைஅறிந்தசாணக்கியர்

**"ஒருவன் முயல்வதைக்கைவிடும்போதுதான் அவன் உண்மையாகத் தோல்வியுறுகிறான்"**

என்றுஉரைசெய்துள்ளனர்.ஆம் தோல்விகள் ஒருபோதும் நிரந்தரமல்லஆனால் தோல்வியால் உன் இலட்சியத்தைகைவிடுவதுநிரந்தரமாகும்.

குழந்தைகள் கூட விடாமுயற்சியின் மூலம் தான் விழும் போதேல்லாம் எழுந்துநடைபயில்கிறார்கள் .ஒவ்வொருமுறையும் விழுகிறோமேஎன்றெண்ணி இருந்துவிட்டால் உலகில் சாதனைகள் நிகழ்ந்திருக்கமாட்டா. இவ்வாறுநம் குழந்தைப் பருவத்தில் நின்றுநம் உதிரம் உற்றிருக்கும் விடாமுயற்சிகாலப்போக்கில்சிலருக்கு சூனிய மாவதற்குக் காரணம் தான் ஏது ?எங்குபிரச்சனை இருக்கிறது? இவ்வாறுஆராய்ந்துசெல்லுமிடத்துவள்ளுவர் அபற்றபதில் தான் சோம்பல்சோம்பல் என்பதுஎம் வெற்றிப் பாதையில் நம்மைஉண்பதற்குக் காத்திருக்கும் அரக்கன் எனக் கொள்ளலாம்.

"மடிமடிக்கொண்டுஒழுகும் பேதைதன்
குடிமடியும் தன்னினும் முந்து" மடி – சோம்பல்

சோம்பலின் இழிவையும் கொடுரத்தையும் வள்ளுவர் இவ்வாறுஅணுகிறார்.சோம்பல் அறுப்பதுஎமதுவாழ்வில் இன்றியமையாத அங்கமாகிவிடுகிறது. அதற்குயாது வழி என்பதைசிந்திப்போம்.

இலட்சியங்களைத் தீர்மானித்தல் எம் இலச்சியப் பயணத்தின் மிகமுக்கியமான பகுதியாகும்.உங்களுக்குபலமான இலட்சியமும்நேர் கொண்டபார்வையும் கிடைக்குமெனில் சோம்பலின் வீரியம் உங்கள் மனவுறுதிடத்துசெல்லாது.

"ஒருகனவிருந்தால் அதைதினம் முயன்றால்
ஒருநாளில் நிஜமாகும்"

எனும் பாடல் வரிகளைநினைவுறுங்கள் உங்கள் கனவுகளைத் தீர்மானிக்கும் காரணிகளில் உன்னிப்பாகக் கவனம் செலுத்துவதில் அதனைஅடையும்பாலம் அழகாகக்கட்டப்பட்டுவிடும்.

ஒவ்வொருவரும் வளரும் சூழல், எதிர்கொள்ளும் பிரச்சனைகள்,எதிர்பார்ப்புகள் மற்றும் ஆசைகளைர் பொறுத்துஅவர்களின் ஆற்றல்கள் வேறுபடலாம்.தத்தமதுஆற்றலுக்கேற்ப இலட்சியங்களைத் தீர்மானிப்பதேஉத்தமம். மரமேறும் திறனைக் கொண்டுமீனைஅணிலுடன் ஒப்பிடமுடியாதல்லவா? இலட்சிய சம நோக்கும் இதற்குஅவசியம். இலட்சியத் துக்காக விடாமுயற்சிகொண்ட பல இலட்சியமாந்தர்கள் யான் இத்தால் எழுதுவதுவெறும் வாய்ச்சொல் அல்லஎன்றுகாட்டுமாறுவாழ்ந்தார்கள் தமது இலட்சியவானத்தைவசப்படுத்தினார்கள் . இராமேசுவரக் கடற்கரைவீடுகளில் பேப்பர் போட்டசிறுவன் இந்தியாவைவல்லரசாக்கும் விஞ்ஞானியானதற்கும் ஒருவேளைஉணவுக்குஅல்லற்பட்டகுடும்பத்தினின்றுஉலகறியம் கால்பந்துநாயகனாகஉயர்ந்த"கிறிஸ்டியானோ ரொனால்டோ"வின் உயர்வுக்கும் அவர்களின் அர்ப்பணிப்பும் ,செலவழித்தநேரமும் ,பயிற்சியும் கொண்டவிடாமுயற்சியேகாரணம் என்றால் மிகையாகாது.இவ்வாறுவிடாஅமுயற்சிபயின்றவர்களைமேரிகியூரி,பெர்னாட்ஈஜு ,பாரதி,காந்தியடிகள்,ஆப்ரகாம் லிங்கன் என்றுஅடுக்கிக்கொண்டேபோகலாம்.

"தோல்வியேவெற்றியின் முதல் படி"என்று கூறியஎடிசன் 999 தடவைகள் தோல்வியுற்றாராம்.

நாம் சரியான இலட்சியத்தை நோக்கி நடந்துகொண்டிருக்கிறோம் என்பதுதெளிவானால் ஏனைய சவால்கள் எமக்குத் தடையாகத் தென்படாதுஎன்பதேயான் எழுதும் வாதம்.

"அடுக்கிவரினும் அழிவு இலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்"

என்றுதிருவள்ளுவர் மனவுறுதிபடைத்தவனிடத்துசெலும் துன்பமேதுன்பப்படும் வேடிக்கையை விளக்கியுள்ளார்.அவமானத்தைஷ்யும், படுதோல்வியையும் நாம் விதைக்கும் இலட்சியமரத்திற்குஉரமாக இட்டு முயற்சியைநீராகஊற்றவேண்டும். தடைகளை வெற்றிகொள்ளத் தெரிந்ததிண்ணமானவன் அம்புற்றுவிழுந்தபின்புமேலும் வெறிகொண்டு முன்செல்லும் களிற்றுக்குஒப்பிடப்படுகிறார்.

**"சிசைவிடத்துஒல்கார்ஊவோர்-புதையம்பின் பட்டுப்பாடுஊன்றும் களிறு"**

மனவுறுதியும் ஊக்கமும் உள்ளவர்கள் தமதுபயணத்தில் தோற்கவேமாட்டார் என்பதுவள்ளுவரின் கருத்து. தோல்விகளே அனுபவம் எனும் கனியைச் சுவைக்க எமக்கு வாய்ப்பளிக்கும்.எமதுமுயற்சிப் பயணத்தில் விளிப்பையும் ,பயிற்சியையும்,அனுபவத்தையும் கொடுக்கும் தோல்வியைஆசானாகக் கொள்வதேஅறிவுற்றோர் செயல். இலட்சியத்தை நோக்கிஊக்கத்துடன் செல்லும் பாதையில் எப்பேற்பட்டதடைகளையும் பொறுத்துநகர்வதே உத்தமம் என்பதைக் காட்டும் இலட்சியவாதியாகத் திருநாவுக்கரசர் திகழ்கிறார்.

**"பறவுங்கள்பறக்கமுடியாவட்டால்ஓடுங்கள், ஓடமுடியாவிட்டால் நடவுங்கள், நடக்கவும் முடியா**
**விட்டால் ஊர்ந்துசெல்லுங்கள்"**

என்றுஉலகையேஉலுக்கிப்போட்ட ஹிட்லரின் வார்த்தைகளைக் கருத்திற்கொள்ளலாம் .நம்மிடத்தேமனவுறுதி இருந்துவிட்டால் வெளிக்காரணிகள் எதுவும் தாக்கம் செலுத்தமாட்டாஎன்று மூத்தோரின் மூட நம்பிக்கைநின்று அல்லற்படும் இளைஞருக்குபாரதிமுழங்குகிறார்.

**"அக்கினிக் குஞ்சொன்றுகண்டேன் - அதை**
**அங்கோர்காட்டிலோர்பொந்திடைவைத்தேன்**
**வெந்துதணிந்ததுகா**
**வீரத்தில்குஞ்சென்றும்மூப்பென்றும்உண்டோ"**

அனைவரும்பூணும் அஸ்திரமாகமுயற்சியைக் கொள்ளுங்கள்.உழைப்பின் முகவரியார் ஒவ்வொருவரும் திகழுங்கள்.

**"இலம் என்றுஏங்கி இருப்பாரைக் காணின்**
**நிலம் என்னும் நல்லாள் நகும்"**

நகைப்பிற்குள்ளாகும்மனிதர்களாயன்றிபழுதிலா இலட்சியவாதிகளாய் ஊக்கத்தைஉடைமையைக் கொண்டுசெயல்படுவர்களாய் விளங்குவதேநம் எதிர்காலசந்ததிவிடுக்கும் கோரிக்கையாகும்.நெருப்புதங்கத்தைச் செப்பனிவிடுவது போன்றுவடுக்கள் கோக்களின் சீரைக் காட்டிநிற்பதுபோன்றுநாம் பெறும் தோல்விகளேநமதுதளராமுயற்சியைஆதாரப்படுத்திநிற்பனஎன்பதை நினைவிற் கொள்ளுங்கள். நாளையஎதிர்காலம் உழகை;கும் மனிதரையேஎதிர்பார்த்துநிற்கிறது.

புரட்சியாளர் சேகுவேராசொன்னதைப்போன்று "விதைத்துக்கொண்டே இருங்கள் முளைத்தால் மரம் இல்லையேல் அதுஉரம்"

ஆம் விடாமுயற்சியுள்ளமனிதர்களைஅன்று ஈன்ற இவ்வுலகு இன்றும் ஈன்று கொண்டிருக்கின்றது என்பது என் நம்பிக்கை . எங்களுள் தூங்கிக் கொண்டிருக்கும் போராளிகளைதட்டிஎழுப்பவேண்டும்.முயற்சிஎன்பதுஒருமரப்பாலம் போன்றதுஎனக்கொள்ளலாம்: வெற்றிக்குக் கொண்டுசேர்க்கும் மரப்பாலம். நாம் பெறும் வெற்றிகளும் அனுபவங்களும் நாம் இடும் மரக்கடடைகள். கட்டைகளை இட்டுக்கொண்டே இருக்கீறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதுஎமதுஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**"பட்டினிகிடந்துபசியால் மெலிந்து**
**பாழ்படநேர்ந்திடினும்**
**கட்டி இழுத்துகால்கைமுறித்துஅங்கம்**
**பிளந்து இழந்துதுடிதுடினும் பொங்கு**
**தமிழைப் பேசமறப்பேனோ"**

என்றுதமிழைவளர்ப்பதை இலட்சியமாகக் கொண்டபாரதியாரின் மனதில் குடிகொண்டிருந்ததிண்ணமும் உறுதியும் நம்மிடத்தையேயும் நல்குமாயின் நம் ஊக்கத்தின் தெருவில் உறும் துன்பங்கள் துவண்டுபோகும் என்பதுஉறுதி.ஔவையார்

''விதியையும் மதியால் வெல்லலவாம்'' என்று கூறியதன் வழியும் பாரதிதோல்வியுறுவோர்."விதியைநோவர் தம் நண்பரைக் தூற்றுவர்''என்றுரைத்ததன் வழியும் விதிஎன்பதுநாம் பிறக்கும் போதேகடவுளால் எழுதப்படுவதல்ல:எமதுஊக்கம் எனும் எழுத்தாணி யால் நாமே எழுதிக் கொள்வது என்பது புலனாகிறது.இவை மேலும் யாம் விளக்கமுனைந்தவள்ளுவரின் வாக்கை வழிமொழிந்து மெய்ப்படுத்துகின்றன.

**"உளிதாங்கும் தற்கள் தானேமண்**
**மீதுசிலையாகும்**
**வலிதாங்கும் உள்ளம் தானேநிலையான**
**சுகம் தாங்கும்"**

என்ற பா.விஜயின் பாடல் வரிகளைமேற்கோள் காட்டுகிறேன். நீங்கள்முடியும் வரைபோராடுங்கள்உங்களால் முடியும் வரைஅல்ல "நீங்கள் நிதைததுமுடியும் வரை'' என்றகவிதையும் நினைவுவருகிறது.

முடிவாக,விடாமுயற்சிஎனும் என்பால் செய்யப்பட்டஅர்ப்பணிப்புஎனும் தோல் பூண்ட ஊக்கம் எனும் மனிதனைஎங்கள் நண்பனாக,ஆசானாக,வழித்துணையாகக் கொள்ளுங்கள் சரியான இடத்தில் சேர்ந்துவிருவீர்கள். உலகிற்குநன்மைபயக்கும் இலட்சியத்தைச் சிறப்பாகத் தெரிவுசெய்துஅதைநிறைவேற்றும் வாழ்க்கைப் பணியைமனிதர்கள் நிறைவேற்ற வேண்டும்.அதற்குநாம் உடைமையைகக் கொள்வதுஊக்கமும் மனவுறுதியும் மட்டுமே.வாழ்வில் இழந்துதளர்ந்துபாடுபடும் வேளையில் உடையார் எனப்படுவதுஊக்கம்என்னும் வாக்கைநினைவுற்றுஉங்கள் சொத்தான ஊக்கத்தைக்கொண்டுநாட்டுக்காய் ,உலகுக்காய் முன்னேறவும் முன்னேற்றவும் தலைநிமிருங்கள்.

**செ.பார்கவி**
**யா/வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை**

# அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், உயரிய மனிதப் பண்பு.

என்றும்அதுமகிழ்ச்சியையும்,மேன்மையையும் தரும்.

அன்புடையவர்களையும்,அன்பாககருமமாற்றுபவர்களையும் எல்லா உயிர்களும் போற்றி மகிழும்.

அவர்கள் தியாகிகளாக ,மகாத்மாக்களாக மதிக்கப் பெறுவார்.

அவர்கள் வாழ்வு தமக்காக இல்லாமல் பிறர்க்காக அமைந்து மகிழ்ச்சி பெறும்.

அதனாலேதான் வள்ளுவரும் ;

**அன்பிலார்எல்லாம்தமக்குஉரியர்-அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு**

என்றும் கூறிச் சென்றார்.

அன்பு என்பதை கண்ணால் காண முடியாது.

அது ஆத்மார்த்தமாக உணர்வுடன் தொடர்பு கொண்டது. மேலும் அதனை நடத்தைகள் மூலமே உணர்ந்து கொள்ள முடியும்.

அன்பு என்பதில் மனித நேயம், இரக்கம், பாசம்,கருணை, ஆகியவற்றைக் கொண்ட மனித நல்லொழுக்கங்கள் பொதிந்து இருக்கும்.இவற்றை மனித நடத்தைகள் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்

இந்த அன்பின் பெரும் சிறப்பு யாதெனில்; அது அன்பை செலுத்துபவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்,அன்பைப் பெறுபவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.இவ்வாறு இருவழி மகிழ்ச்சி அளிக்க வல்லது அன்பு.

ஆதலால் அன்பு செலுத்துவோம்!அன்பு செலுத்துவோம்!!

அன்பாகக் கதையுங்கள் அது உங்களை அழகாக்கும்..அன்பாகக் கதையுங்கள் பகை தோன்றாது. அன்பாகக் கதையுங்கள் அது உங்களுக்கு சமூக பலத்தைத் அளிக்கும்.

அன்பாகக் கதைப்பதாலும் பழகுவதாலும் அது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நிரந்தரமான இன்பமே தந்து நிற்கும்.அன்பு செலுத்த எதுவுமே தேவையில்லைஅதனிக் கொடுக்கக் கொடுக்க வற்றாத ஜீவ நதியாக வளர்ந்து கொண்டே இருக்கும்.மேலும் மேலும் கொடுக்க வேண்டும் என்ற .ஆர்வத்தை வளர்த்து நிற்கும்.உள்ளம் தூய்மை பெறும்.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பினால் தீய குணங்களான கோபம், பொறாமை,அகந்தை,தேவையற்ற உள அழுற்சி போன்றவை அழிக்கப்பட்டு நற்குனங்களானபாசம்,பரிவு,உண்மை,நேர்மை,கடமை,கண்ணியம் ,கட்டுப்பாடு போன்றன வளர்க்கப்படும்.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பு இன,மொழி,சாதி,சமய வேறுபாடுகள், பொருளாதார ஏற்ற தாழ்வுகள் அறியாது.யாதும் ஊரே! யாவரும் கேளிர்!! எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் நிறம் என்று நியாய வாழ்வுக்கு இட்டுச் சென்று மேலான வாழ்வினைத் தந்து நிற்கும்.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பு கிடைப்பது வரம்! அன்பு செலுத்துவது புண்ணியம்!!வேஷமில்லாத உண்மையான அன்பு எவரையும் ஏமாற்றாது.அமைதி நிறைந்த மேன்மை வாழ்வுக்கு மதிப்பற்ற உயர்ந்த ஔடதமாகவும் அது அமையும்.

ஆதலால் எமது வாழ்வை அன்பு வாழ்க்கை நெறியாகக் கொண்டு;

அன்புடன் வாழ்வோம்.மகிழ்ச்சி பெறுவோம்.

**-தாமரை நாயகன்-**

# அலவத்துகொடையில் கைதான இருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம்!

கண்டி அலவத்துகொடை பிரதேசத்தில் 5 ஆயிரம் ரூபா கொண்ட43போலிநோட்டுக்களை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் அப்பகுதியில் ஸ்ரூடியோ ஒன்றை நடத்திவந்துள்ளார் எனப்பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர் கணினி மற்றும் பிரிண்டரை பயன்படுத்தி போலி ரூபா நோட்டுகளை தயாரித்து வந்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியதகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது குறித்த உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் 36 மற்றும் 41 வயதுடைய அலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

# புல்மோட்டையிலிருந்து கொழும்பு சென்ற பஸ் விபத்தில் சிக்கியதில் 10 பேர் காயம்

கொழும்பு - சிலாபம் வீதியில் வென்னப்புவ நைனாமடம் கிங்கோயா பாலத்துக்கு அருகில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று புல்மோட்டையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே விபத்துக் குள்ளானது.

குறித்த பஸ் பாலத்தின் பக்கவாட்டு வேலியில் மோதியதில் விபத்துஏற்பட்டது, இதனையடுத்து சீமெந்து கலவை ஏற்றிச் சென்ற லொறியும் குறித்த பஸ் மீது பின்புறத்தில் மோதியுள்ளது.

சம்பவம் தொடர்பில் வென்னப்புவபொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கட்டாரில் தொழில் பெற்றுத் தருவதாக பணமோசடியில் ஈடுபட்ட இரு பெண்கள்

**மன்னார் பொலிஸார் விசாரணை**

கட்டார் நாட்டில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பணத்தை பெற்று ஏமாற்றிய இரண்டு பெண்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பெண்கள் கட்டாரில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி 6 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மன்னார் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# காணாமல்போன பொலிஸ் கான்ஸ்டபிள் மன்னார் வனப் பகுதியில் கண்டுபிடிப்பு!

காணாமல்போன பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மன்னார் வனப் பகுதியில் கண்டுடபிடிக் கப்பட்டுள்ளார்.

குறித்த கான்ஸ்டபிள் மன்னார் பண்டிவிரிச்சான கிராமத்துக்கு அருகில் உள்ள வனப்பகுதியில் காணப்பட்ட கல் ஒன்றில் அமர்ந்திருந்த நிலையிலேயே பொலிஸ் குழுவினரால் கண்டுபிடிக் கப்பட்டுள்ளார்.

இந்த கான்ஸ்டபிள் 19 ஆம் திகதி புதன்கிழமை பொலிஸ் குழு ஒன்றுடன் மடுப்பகுதி வனப் பிரதேசத்துக்கு சென்றிருந்தபோது காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிக வெப்பமான காலநிலைமையால் நீர் பாவனை 10 சத வீதம் அதிகரிப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள அதிக வெப்பமான காலநிலை காரணமாக மக்களின் நாளாந்த நீர் பாவனை சுமார் 10 சத வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய நீர் வழுங்கல்மற்றும்வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மக்கள் முடிந்த வரை தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துவதன் மூலம் நீண்டகாலத்துக்கு பிரச்சினையின்றி நீரை வழங்க முடியும் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS



### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 07 வியாழக்கிழமை 20.04.2023 கதிர் 34

# பிக்கு கைது

யானைத் தந்தங்களை கடத்தல்காரர்களூடாக விற்க முயன்றார் என்கிற குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பக்தர் ஒருவர் காணிக்கையாக வழங்கிய யானைத் தந்தங்களை 50 இலட்சம் ரூபாவுக்கு இவர் விற்க முயன்றார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர். பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினர் இந்தப் பிக்குவைக் கைது செய்துள்ளனர்.

மாத்தறை பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவர் பெரும் தந்தம் ஒன்றை விற்க ஏற்பாடு செய்கிறார் என்றும் கொள்வனவு செய்பவரை தேடுகிறார் என்றும் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து விசேட பொலிஸ் குழுவினால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம்

2

ஈஸ்டர் குண்டுவெடிப்பின் 4ஆம் ஆண்டையொட்டி

# கட்டுவாப்பிட்டியவிலிருந்து இன்றிரவு பேரணி புறப்பாடு

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களின் நான்காவது ஆண்டு நினைவு நாளான நாளைய தினத்தையொட்டி கட்டுவப் பிட்டியவில் இருந்து இன்று இரவு கிறிஸ்தவர்களும் அவர்களின் மதத் தலைவர்களும் கொழும்பு நோக்கிப் பேரணி நடத்தவுள்ளனர்.

நாளை காலை கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தை வந்தடையும் வண்ணம் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர்னான்டோ தெரி வித்தார். கட்டுவப்பிட்டிய தேவால யத்தில் இருந்து இன்றிரவு தொடங்கும் இந்தப் பேரணி காலையில் கொச்சிக் கடையை வந்தடையும்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று நான்கு வருடங்களாகின்றபோதும் இது–வரையில் உண்மை மற்றும் நீதி நிலைநாட்டப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பெரும் மனிதச் சங்கிலப் போராட்டமொன்றை நாளை நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளார் பேராயர் கர் தினால் மல்கம் ரஞ்சித். கொழும்பு பேராயர் இல்லத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் ஏப்ரல் 21 பெரும் மக்கள் அரணொன்றை உருவாக்கு–வதற்கு இன, மத பேதமின்றி அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் அழைப்புவிடுத்தார்.


கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம் வரையில் கொழும்பு நீர்கொழும்பு பிரதான வீதியின் இருமருங்கிலும் தொடர்ச்சியாக நாம் மனிதச் சங்கிலியாக நின்று நீதி கோரவுள்ளோம்.

காலை 8.45 மணிக்கு இரு நிமிட் மௌன அஞ்சலியையும் செலுத்தவுள்ளோம், இந்த அஞ்சலியில் அனைத்து நாட்டில் உள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்தப் போராட்டத்தின் பின்னர் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்கள் சந்திப்பொன்று எனது தலைமையில் நடைபெறவுள்ளது – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனாவால் மீண்டும் இறப்பு

## யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நீர்வேலியைச் சேர்ந்த முதியவர் நேற்றிரவு உயிரிழந்தார்



(ந.லோகதயாளன்)

கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தில் மீண்டும் முதல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. நோயால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தல் சிகிச்சையில் இருந்தவர் நேற்றிரவு உயிரிழந்தார்.

”கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதற்குரிய தனிமைப் படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒருவர் நேற்றிரவு உயிரிழந்தார். சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக அவரது உறவினர்கள் கோரும் பட்சத்தில் அவரது உடல் உரிய முறையில் பொதி செய்யப்பட்டு இறுக் கிரியைகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கப்படும்” என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி காலைக்கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

# படையினரின் பிடியிலுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்திப் போராட்டம்

## ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்று





(எஸ்.நிதர்சன்)

வடக்கு மாகாணத்தில் படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலி யுறுத்தி ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்றையதினம் போராட்டம் நடந்தது.

இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஆளுநருக்கு மனுவும் கையளிக்கப்பட்டது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு கிழக்கு பெண்கள் அணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ். மாவட்டச் செயலக முன்றலில் இருந்து ஆளுநர் அலுவலகம் வரை பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் ஆளுநர் அலுவலகத்தில் மனுவைப் கையளித்தனர்..

படையினர் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பதால் அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர் என்று குறிப்பிட்ட போராட்டக்காரர்கள், அவர்களின் காணிகளை விடுவித்து மீள்குடியமர ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்தினர் சொந்த நிலத்தில்

2

# நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை அழித்தொழிப்பதே ஆட்சியின் நோக்கம்

## ஆட்சியாளர்களின் முயற்சி தோற்கடிக்கப்படும் என்கிறார் சஜித்



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளை அழித்தொழிப்பது மட்டுமே இந்த ஆட்சியின் ஒரே நோக்கமாகும், இதனை முறியடிக்க அனைத்து முற்போக்கு சக்திகளும் திரண்டுவருகின்றன என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச. இந்த ஆட்சியைக் கொண்டு நடத்தப்போகும் சர்வாதிகார மிலேச்சத்தனமான இந்தச் சட்டத்தை இல்லாதொழிக்கத் தான் தயார் என்றும் அவர் சூளுரைத்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இந்த ஆட்சி தொடர்ந்தும் மக்களின் உரிமைகளை ஒடுக்க முயற்சிக்கிறது மற்றும் பல்வேறு அரச சக்திகளையும் வளங்களையும் பயன்படுத்தி மக்களின் உரிமைகளைப் பறிக்கிறது.

இந்நிலை நீடித்தால் நாடு சர்வாதிகார நாடாக மாறிவிடும்., மக்கள் ஆணையின் மூலம் பெற முடியாத அதிகாரத்தை படையினரின் சேவை ஊடாகப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்றும் அந்த அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். மக்களை அடக்குமுறைக்குள்ளாக்கும் இந்த முயற்சி தோற்கடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# “வேண்டாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்” வட–கிழக்கு பெண்கள் இன்று போராட்டம்

## புதிய சட்டத்தைக் கொண்டுவர முயலும் ஆட்சியாளர்களுக்கு எதிராக முழக்கம்

அம்பாவை மாவட்டம்



யாழ்.மாவட்டம்




(எஸ்.நிதர்ன்)

அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என வலியுறுத்தியும் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக அகற்ற வேண்டுமெனவும் வலியுறுத்தியும் வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு என்ற அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் கொண்டு வரப்பவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வேண்டாம் எனவும் அதற்கான முயற்சிகள் உடன் நிறுத்தப்பட வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.


தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தாலும் மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதால் அதனையும் நீக்க வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். .

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாகப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு

2

# குரங்குகளின் ஏற்றுமதி சாத்தியமற்றது அது குறித்துப் பேசுவதை நிறுத்துங்கள்

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் காட்டம்



இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் செங்குரங்குகளைச் சீனாவிற்கு ஏற்றுமதி செய்வது எந்தவகையிலும் சாத்தியமற்றது. எனவே அது குறித்துப் பேசுவதை நிறுத்துங்கள் என்று ஆட்சியாளர்களிடம் காட்டமாகத் தெரிவித்திருக்கின்றது தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்.

குரங்குகளை ஏற்றுமதி செய்யும் முடிவு குருட்டுத்தனமானதும் சூழல் விரோதமானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததுமான ஒன்று என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இன்று விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அழிந்துவரும் காட்டுயிரிகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கையைச் சீனா ஏற்றுக் கொண்டிருப்பதால் குரங்குகளின் இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்றும் சீனத் தூதுவராலயம் தெரி வித் திருக்கிறது. ஆனால் இ சட்டபூர்வமான அனுமதி இல்லாத நிலையிலும்; குரங்குகள் உட்பட அழிந்துவரும் பல காட்டுயிரிகளின் மிகப் பெரும் கறுப்புச்சந்தை யாக இன்றளவும் சீனாவே இயங்கி வருகிறது. சீன உணவகங்களில் குரங்கிறைச்சி அதிவிருப்பத்திற் குரிய தெரிவு என்பதாலும் ஆய்வகங்களில் குரங்குகள் சோதனை விலங்குகளாக அதிகம் தேவைப்படுவதாலும் சீனா வில் குரங்குகளுக்கான தட்டுப்பாடு எப்போதுமே நிலவு கிறது.

இதனை ஈடுகட்டவே ஜீவகாருண்யர்களின் தண்டனைகளில் இருந்து தப்ப மிருகக்காட்சிச் சாலைக ளுக்கென்ற பெயரில் குரங்குகளின் வர்த்தகத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குரங்குகளால்; பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால் இ கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக இ பின்நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுக ளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால் இ காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல்

2

## "வேண்டாம்...

வருவதற்கான முயற்சியாக அந்த சட்டத்தின் வரையை ஆட்சியாளர்கள் வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு எதிர்க் கட்சிகளும் பொது அமைப்புக்களும் கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றன. இருப்பினும் அந்தச் சட்டமூலத்தை ஏப்ரல் 25 நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு நாள் குறித்துள்ளது.

அதற்கிடையில் அந்தச் சட்டமூலத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளனர். அப்படி தாக்கல் செய்யப்படும் வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கக்கூடிய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு சட்டத்தைத் திருத்தத் தாம் தயாராக இருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.

ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே பெண்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினார்கள்.

**யாழ்ப்பாணம்**

யாழ். மாவட்டப் போராட்டம் மாவட்டச் செயலகம் முன்பாக காலை 10 மணிமுதல் 12 மணிவரை இடம்பெற்றது..

மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள், சிறுபான்மையினரை அடக்குவதற்காக புதிய சட்டத்தை உருவாக்காதே, அச்சமின்றி வாழ விடுங்கள், அச்சுறுத்தும் சட்டங்களை உருவாக்கி மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை முடக்காதே, பயங்கரவாதத்தை தடுப்பதாகக் கூறி மக்களை அச்சுறுத்தாதே, இந்த நாட்டில் எங்களையும் சுதந்திரமாக வாழ வழி விடுங் கள், மக்களை வதைக்கும் சட்டங்களை உருவாக்காதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். ஆட்சியாளர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். .

இந்தப் போராட்டத்தில் சட்டத்தரணிகள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**வவுனியா**

வவுனியா கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் பத்தினியார் மகிழங்குளம், முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

'சிறுபான்மையினரை அடக்குவதற்காக புதிய சட்டத்தை உருவாக்காதீர், இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி விடுங்கள், இலங்கை அரசே பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்கதே' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளைப் பெண்கள் ஏந்தியிருந்தனர். பயங்கரவாதச் சட்டங்களுக்கு எதிராக முழக்கமிட்ட அவர்கள் இறுதியில் தமது கோரிக்கையை அரசுக்குத் தெரியப்படுத்தும் வகையில் அதனைப் பகிரங்கமாக வாசித்தனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சிப் போராட்டம் பழைய மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். பயங்கரவாதச் சட்டங்களைக் கொண்டு வரும் ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக அவர்கள் குரல் எழுப்பினர்.

**அம்பாறை**

அம்பாறை மாவட்டம் மத்திய முகாமில் உள்ள நான்காம் கிராமம் பாமடி என்ற பிரதேசத்திலும் இந்தப் போராட்டம் நடைபெற்றது .

300க்கும் மேற்பட்ட பெண்கள் மும்மொழிகளிலும் சுலோகங்கள் பொறித்த பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

இறுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என்ற தலைப்பிலான தமது கோரிக்கையைப் பகிரங்கமாக வாசித்துக் குரல் எழுப்பிய பின் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அறிவிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் எனவும், இந்தச் சட்டத்தால் கருத்துச் சுதந்திரம் பறிபோகும் என்றும், இது முற்றுமுழுதாக வேண்டாம் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர். (02, 05)

## குரங்குகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனங்களாகக் கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற் றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்நிலையில் எதனையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே குரங்குகளினால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப் படுத்த முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவரே உயிரிழந்தார். அவருக்கு கொரோ பெருந்தொற்று ஏற்பட்டிருப்பது ஏப்ரல் 15 உறுதி செய்யப்பட்டது.

அவர் கடுமையான மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் தொற்றின் தீவிரம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடலம் மூடிச் சீல் வைக்கப்பட்டு உறவுகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதோடு சடலம் வெளியே எடுக்கப்பட்டு சடங்குகள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப் பட்டது.

கொரோனா பெருந்தொற்று பாதிப்பு, தடுப்பூசிகளைத் தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் கொரோனா அறிகுறியுடன் 5 பேர் இந்த மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களிலல் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

ஏனையவர்களுக்கு தொடர்ந்தும் உயர்வாயு (ஒட்சிசன்) வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கிடையில் கொரோனா பரிசோதனைகளை நடத்தவேண்டாம் என்று சுகாதார அமைச்சு அறிவித்திருப்பதால் மேலதிக தொற்றாளர்களை அடையாளம் காண்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

## பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட விசாரணைகளில்

கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பிக்கு கைது செய்யப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தார்.

## படையினர்...







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என் றும் கேட்டுக்கொண்டனர்.

வடக்கு மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் பல ஆயிரக்கணக்கான பொது மக்களின் காணிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இருப் பதாகவும் அதனை விடுவிக்க வேண்டுமெனவும் போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

# பெரியநீலாவணையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



கேரளா கஞ்சா வைத்திருந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடர் மாடிவீட்டுத்திட்டப் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட தேடுதலில் சந்தேகநபர் கைதானார்.

பெரியநீலாவணை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டி.துாரதிலங்க ஜெயலால் வழிகாட்டலுக்கு அமைய பெரும் குற் றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான டி.தினேஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகத்துக்கிடமான நபரைக் கைது செய்தனர்.

இதன்போது சந்தேகநபர்வசம் இருந்து 860 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப் பட்டது. இவ்வாறு கைது செய்யப்பட்ட 35 வயதுடைய சந்தேகநபரைக் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த மேலதிக விசாரணைகளைப் பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

# தரம் 6 மாணவர் சேர்ப்பு மேன்முறையீடுகள் இன்று முதல் ஏற்பு



ஐந்தாம் தர புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டு தரம் 6 வகுப்புகளில் பாடசாலை அனுமதியைப் பெறுவதற்கான மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன. பெற்றோர் இணையத் தளம் ஊடாக அதற்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

20.04.2023 நண்பகல் 12.00 மணி முதல் 08.05.2023 நள்ளிரவு 12.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

https://g6application.moe.gov.lk// என்ற இணையத்தளத்துக்குச் சென்று மேன்முறையீட்டு விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிக்க முடியும்.

www.moe.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று பாடசாலை விண்ணப்பம் தொடர்பான பாடசாலைக் கணக்கெடுப்பு எண் (சென்சஸ் எண்) கொண்ட ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியத் தூதுவர் இன்று மகிந்தவுடன் சந்திப்பு





இந்திய உயர்ஆணையர் கோபால் பாக்லே இன்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக் வை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். மகிந்தவுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் வகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று மகிந்தவின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில், இலங்கையுடனான கடனை மறுசீரமைப்பதில் இந்தியாவின் ஆதரவை இந்தியத் தூதுவர் மகிந்தவுக்கு விளக்கினார். இருநாடுகளுக்கும் இடையிலான உளவுகள், நலன்கள் குறித்தும் இருவரும் அக்கறை செலுத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல இந்திய முதலீடுகள் குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

மஹிந்த ராஜபக் ஜனாதிபதி மற்றும் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் தொடங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட ருகுணு பல்கலைக்கழக கேட்போர் கூடம் மற்றும் யாழ். கலாசார நிலையம் தொடர்பாகவும் மகிந்த இந்தச் சந்திப்பின்போது கேட்டறிந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பு நட்பு ரீதியிலும் சுமுகமான சூழ்நிலையிலும் நடைபெற்றதுடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான தமது உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர் என்று மகிந்தவின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

# நேற்று அதிக எரிசக்தி நுகர்வு

அண்மைக் காலத்தில் அதிகளவான எரிசக்தி தேவை நேற்று பதிவானதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது கீச்சகப் (ருவிட்டர்) பதிவில் , எரிசக்தி உற்பத்திக்கு 49.53 ஜிகாவோட்ஸ் தேவை என்று குறிப்வபிட்டுள்ளார். இன்று (20) 50 ஜிகாவோட்டை தாண்டும் மின்சாரத் தேவை ஏற்படக்கூடும் என தாம் கணிப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அம்பாந்தோட்டை டீசல் நிலையத்தின் ஜெனரேட்டர்கள் உட்பட அனைத்து அனல் மின் நிலையங்களும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப் படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### காணித் தகறாறில்

# முதியவர் முதியவரால் அடித்துக் கொலை

காணி தகராறு முற்றியதையடுத்து 74 வயது முதியவர் மண்வெட்டியால் அடித்துக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்கியவர் 60 வயதானவர் என்றும் தனது சகோதரியின் கணவரையே தாக்கிக் கொன்றுள்ளார் என்றும் கல்னேவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் ஹெலபதுகம, கல்னேவவில் வசிக்கும் அபேரத்ன பண்டா என்ற விவசாயியே உயிரிழந்தார். இந்தக் கொலை தொடர்பில் அதேயிடத்தச் சேர்ந்த 60 வயது நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் ஏப்ரல் 16 ஹெலபதுகம பிரதேசத்தில் உள்ள வயல் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்தபோது, அங்கு வந்த அவரது மூத்த சகோதரி மற்றும் கணவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கமே கொலையில் முடிந்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

# கடன், கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளிலேயே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தங்கியுள்ளது!




## உலக வங்கி சுட்டிக்காட்டு

தளம்பலான அரசியல் நிலைவரம் மற்றும் நிதியியல்துறைசார் தளம்பல்கள் என்பன கடந்த ஆண்டு ,லங்கையின் பொருளாதாரத்தில் நிலையற்றதன்மையைத் தோற்றுவித்திருந்தன.

அதன் தொடர்ச்சியாக தற்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய கூறுகள் கடன் மறுசீரமைப்பிலும், வளர்ச்சியை விரிவுபடுத்தக்கூடிய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களிலுமே தங்கியிருக்கின்றன என உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியால் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்குரிய இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

கடந்த 12 மாதங்களில் ,லங்கையின் பொருளாதார நிலைவரம், தற்போது அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள், எதிர்வருங்காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன்படி அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு

இலங்கையில் கடந்த ஆண்டு வலுப்பெற்ற பொருளாதார நெருக்கடியின் விளைவாக கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் சுமார் அரை மில்லியனுக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பை ,ழந்ததுடன் விவசாயத்துறைசார் தொழில்வாய்ப்புக்களால் வருமான ,ழப்பை ஈடுசெய்யமுடியாத நிலையேற்பட்டது.

இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட வாழ்க்கைச்செலவு உயர்வானது வறுமை மட்டம் இருமடங்காகவும், மும்மடங்காகவும் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. குறிப்பாக ,ந்நெருக்கடியால் பெருந்தோட்டப்பகுதிகளில் 52 சதவீதமானோர் வறுமைக்குள் தள்ளப்பட்டதுடன் நாடளாவிய ரீதியில் சமத்துவமின்மை உயர்வடைந்தது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் 8.1 பில்லியன் டொலராகப் பதிவான வர்த்தக மீதி கடந்த ஆண்டு 5.2 பில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்தது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 7.2 சதவீதமானோரின் வருமான மார்க்கங்கள் தடைப்பட்டதுடன், அவர்கள் தமது அன்றாட உணவுத்தேவையைப் பூர்த்திசெய்துகொள்வதற்குப் பல்வேறு மாற்றுவழிகளைக் கையாள முற்பட்டதன் விளைவாக 'உணவுப்பாதுகாப்பின்மை' அச்சுறுத்தல் நிலை வலுப்பெற்றது.

கொவிட் – 19 பெருந்தொற்று உள்ளடங்கலாகப் பல்வேறு நெருக்கடிகளால் கடந்த 5 வருடகாலத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு என்பன மந்தகரமான நிலையிலேயே காணப்பட்டன.

எனவே தளம்பலான அரசியல் நிலைவரம் மற்றும் நிதியியல்துறைசார் தளம்பல்கள் என்பன கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரத்தில் நிலையற்றதன்மையைத் தோற்றுவித்திருந்தன.

அதன்படி தற்போது பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய கூறுகள் கடன் மறுசீரமைப்பிலும், வளர்ச்சியை விரிவுபடுத்தக்கூடிய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களிலுமே தங்கியுள்ளன. அதேபோன்று நடுத்தரகாலத்தில் வரவு, செலவுத் திட்டப்பற்றாக்குறை படிப்படியாக வீழ்ச்சியடையும் என்றும் அதனைத் தொடர்ந்து பணவீக்கம் குறைவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாவசியமான நுண்பாகப்பொருளாதார மறுசீரமைப்புக்கள் பொருளாதார வளர்ச்சியிலும், வறுமையிலும் எதிர்மறையான உடனடித்தாக்கத்தை ஏற்படுத்தினாலும்கூட, பின்னர் அது அனைத்துத் தளம்பல்களையும் சீர்செய்வதுடன் மீண்டும் சர்வதேச நிதியியல் சந்தையை நாடுவதற்கும், நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்குரிய அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பெரிதும் உதவும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# காலிமுகத்திடலில் போராட்டங்களுக்கு தடை விதிக்கக் காரணம்தான் என்ன?

## ஐ.தே.க. தலைவர் விளக்குகிறார்



காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருக்கும் துறைமுக நகருக்கு ஏற்றவகையில் அதனை சுற்றியுள்ள சூழலை அழகுபடுத்தவும் அந்த பகுதியில் இருக்கும் ஹோட்டல்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்குமே காலி முகத்திடலில் போராட்டங்கள் பேரணிகள் நடத்துவதை தடைசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என ஐக்கிய தேசிய கட்சி தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் ,டம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

காலிமுகத்திடலை விற்பனைசெய்யப்போவதாக பிரசாரம் செய்தே 1996 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைத் தோல்வியடையச்செய்தார்கள்.

ஆனால் பின்னர் அவ்வாறு பிரசாரம் செய்துவந்தவர்களே சுமார் 15 வருடங்களுக்கு பின்னர் நாங்கள் ஆரம்பிக்க இருந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து, தற்போது போட்சிட்டி அமைக்க நடவடிக்கை எடுத்தார்கள். எனறாலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இது சிறந்த வேலைத்திட்டமாகும்.

தற்போது அந்த பிரதேசத்தில் போட்சிற்றி அமைக்கப்படுள்ளதால், அந்த இடம் மற்றும் அதற்கு சூழவுள்ள இடம் போட்டிக்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும். அங்கு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவது பொருத்தம் இல்லை. போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குத் தேவையான அளவு மைதானங்கள் இருக்கின்றன. அங்கு இதனை முன்னெடுக்கலாம்.

அத்துடன் காலிமுகத்திடலில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் காரணமாக அந்த பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் நடவடிக்கைகளுக்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் இந்த விடயங்களை கருத்திற்கொண்டு மத நடவடிக்கைகளுக்கு மாத்திரம் குறிப்பிட்ட நேர வரையறையுடன் அனுமதி அளித்து ஏனைய களியாட்ட நிகழ்வு மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களை காலிமுகத்தில் நடத்துவதற்கு தடைவிதிக்க அரசாங்கம் தீர்மானித்தது. – என்றார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு பெறும் வழக்கு முறையாகத் தாக்கலாகும்

## நீதி அமைச்சர் விஜயதாஸ உத்தரவாதம்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கான குறித்த காலம் முடிவடைவதற்கு முன்னர் முறையாக மேற்கொள்ளப்படும்.

வழக்கு தொடுக்கும் நடவடிக்கை மந்தகதியில் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கிறேன் என நீதி அமைச்சர் விஜேதாஸராஜபக்ஷ தெரிவித்தார்.

கப்பலில் ஏற்பட்ட தீயால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் வழக்கு தொடுக்கும் நடவடிக்கை மந்தநிலையில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் வழக்குதாக்கல் செய்யும் நடவடிக்கை பல்வேறு காரணங்களால் மந்தநிலையில் ,டம்பெறுவதாக எனக்குப் புலப்பட்டது.

அதனால் அது தொடர்பில் தலையிட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கான குறித்த காலம் முடிவடைவதற்கு முன்னர் முறையாக வழக்குதாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அத்துடன் கப்பல் தீப்பற்றி எரிந்தமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு மதிப்பிடுவதற்காக 40 பேர்கொண்ட நிபுணர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை கடந்த வருடம் செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்தார்கள்.

என்றாலும் குறித்த அறிக்கை கடந்த ஜனவரி மாதம் நடுப்பகுதியிலேயே என்னிடம் கையளித்தார்கள். தற்போது அந்த அறிக்கையை தொடர்பான சட்ட நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ளோம்.

நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கான வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இதுதொடர்பான சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுத்துவரும் வெளிநாட்டு சட்டத்தரணிகள் நிறுவனத்துடன் இணைந்து மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன் இதற்காக ஒருசிலர் லஞ்சம் பெற்றுள்ளனர் என முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ள எந்த நபருக்கு எதிராகவும் சட்டத்தை நிலை நாட்டுவதுடன் அந்த நபர்களின் பெயர். வங்கி கணக்கு. இடம் உட்பட தகவல்கள் தொடர்பில் பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

காலாவதியாவது தொடர்பில் தற்போதுள்ள சட்ட நிலைமையின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்ய, குறித்த காலம் முடிவடைவதற்கு முன்னர் நட்டஈடு பெற்றுக்கொள்வது தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

அதுதொடர்பில் பிரச்சினைப்படுத்திக்கொள்ளத் தேவையில்லை. இதனை விட பாரிய வழக்குகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்கள திறமையான அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

எனவே, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு அதுதொடர்பாக வழக்கு தாக்கல்செய்யும் நடவடிக்கை சமுத்திரம் தொடர்பாக விசேட நிபுணத்துவம் கொண்ட சட்டமா அதிபர் திணைக்கள திறமையான அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் இதுதொடர்பில் யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. – என்றார்.



# கிளிநொச்சியில் எறிகணை மீட்பு

கிளிநொச்சி-விவேகானந்தர்நகர் பகுதியில் கடந்த வாரம் வீட்டுக்கு அத்திபாரம் வெட்டும்போது மண்ணில் புதையுண்ட நிலையில் எறிகணையொன்று அடையாளம் கானப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விவேகானந்த நகர் தாய் தந்தையை இழந்த சிறுவன் ஒருவருக்கான வீட்டை ஒருவரின் உதவி மூலம் அமைக்கும் பொருட்டு கடந்த வாரம் அத்திபாரம் வெட்டப்பட்டுள்ளது.

இதன் போது மண்ணில் புதையுண்ட நிலையில் எறிகணையொன்று அடையாளம் கானப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பகுதி கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் இராணுவத்தினர் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இருப்பினும் கடந்த எட்டு நாள்களுக்கு மேலாக குறித்த வெடிபொருள் அகற்றப்படாத நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியின் பிறந்த நாளில் சஜித் சிறப்பு மத வழிபாடு







எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது மனைவி ஜலனி பிரேமதாஸவின் பிறந்தநாளை முன்னிட்டு சோமாவதிய ரஜமகா விகாரையில் விசேட சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளார்.

புத்தாண்டு ஆசீர்வாதங்கள் மற்றும் ஜலனி பிரேமதாஸவின் பிறந்தநாளை முன்னிட்டு மேலும் பல விசேட சமய நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டுள்ளார்.

இந்த சமய நிகழ்ச்சிகளுடன் சங்கத் தட்சிணமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மல்வத்து மகாவிஹார பார்ஷ்வ கலாநிதி பஹமுனெய் தர்மகீர்த்தி ஸ்ரீசாரங்கர சுமங்கல , வரலாற்றுச் சிறப்புமிக்க சோமாவதி ரஜமஹா விகாரையின் மகாசங்கத்தினர் கலந்துகொண்டுள்ளனர்.

சோமாவதிய ரஜமஹா விகாரையில் ,டம்பெற்ற வழிபாட்டு நிகழ்வுகளை தொடர்ந்து மகா சங்கரத்தினரின் ஆசிர்வாதத்தையும் பெற்றுள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கொரோனா குறித்து அவதானம் தேவை

கொரோனா பெருந் தொற்றால் மீண்டும் உயிரிழப்பு ஏற்பட்டிருப்பது கவனத்தை ஈர்த்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்குச் சிகிச்சை பெற்று வந்த ஐவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நீர்வேலியைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கொரோனா பெருந்தொற்று ஆபத்து நீங்கியது என்று இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னர் நிகழ்ந்திருக்கக்கூடிய இந்த இறப்பு மீண்டும் ஓர் அச்ச நிலையை ஏற்படுத்தவல்லது. உயிரிழந்தவரும் தொற்றுக்குள்ளாகிய ஏனையவர்களும் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டவர்களா என்கிற விவரம் இன்னும் வெளியாகவில்லை.

உயிரிழந்திருப்பவர் வயோதிபர் என்கிற நிலையில் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டிருக்கவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன. எனினும் முறையாக மூன்றுகட்டத் தடுப்பூசிகளையும் அவர் எடுத்துக்கொண்டிருந்தாரா என்பது குறித்த தகவல்கள் வெளிவரும்போதே தற்போது பரவத் தொடங்கியிருக்கும் கொரோனா பற்றிய உண்மைத் தகவல்களும் வெளிவரக்கூடும்.

கொரோனாவிற்கான மூன்றாம் கட்டத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும்பாலான இலங்கையர்கள் ஆர்வம் காட்டவில்லைல என்பது கவலைக்குரியது. இரண்டாவது ஊக்க தடுப்பூசியைக்கூட கணிசமானோர் பெற்றுக்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் கூட இருக்கிறார்கள். ஆண்மைக் குறைவு ஏற்படும், உடல் பலவீனம் ஏற்படும் போன்ற காரணங்களைக் கூறிக்கொண்டு பலரும் இப்படி கொரோனா தடுப்பூசியை ஒரு தடவைகூட ஏற்றுக்கொள்ளாமல் தவிர்த்துக்கொண்டார்கள்.

90 வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியையும் கணிசமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டதால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நோய் எதிர்ப்பு சக்தி பெருந்தொற்றின் பரவல் சங்கிலி தொடர அனுமதிக்காது என்கின்றனர் மருத்துவத்துறையினர். அதாவது தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஒருவர் தொற்றுக்குள்ளானால்கூட அவரிடமிருந்து அந்தத் தொற்றுப் பலருக்கும் தொடர்ச்சியாகப் பரவுவதற்கான சாத்தியம் இல்லை. தடுப்பூசி ஏற்றியவர்கள் அதற்கான தடுப்பரணாக இருப்பார்கள் அல்லது அந்தத் தொற்றுச் சங்கிலியைச் சிதைப்பவர்களாக இருப்பார்கள் என்பதால் இந்தப் பரவல் குறித்து பெரிதும் அச்சப்படத் தேவையில்லை என்பதே மருத்துவத் துறையினரின் கணிப்பு.

இருந்தாலும் கவனக் குறைவாக இருப்பது நல்லதல்ல. மீண்டும் கொரோனா பரவல் என்பது பொருளாதார நெருக்கடியில் மற்றுமோர் பெரும் இடியாக விழுந்துவிடும் என்ற அச்சம் காரணமாக இதுபோன்ற விவரங்களை ஆட்சியாளர்கள் அடக்கியே வாசிக்க முயல்வார்கள். குறிப்பாக தற்போதுதான் மீண்டெழத் தொடங்கியிருக்கும் சுற்றுலாத்துறை மீது கொரோனா பற்றிய செய்திகள் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்பதால் அவற்றை மறைப்பதற்கு அவர்கள் முயலக்கூடும். யாழ். போதனா வைத்தியசாலையில் கொரோனா பரிசோதனை செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதாக வெளியாகும் தகவல்களை இந்தப் பின்னணியிலேயே நோக்கவேண்டும்.

தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும் கொரோனாவின் பல்வேறு திரிபுகளாலும் தாக்கம் தொடரக்கூடும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. எனவே இது விடயத்தில் ஆட்சியாளர் வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையான சுகாதார நடைமுறைகளுடனும் செயற்படுவது அவசியம். பெரும் பாதிப்பு, விளைவுகள் ஏற்படுவதற்கு முன்பதாக இது குறித்துப் போதிய அக்கறை செலுத்தப்படுவது கட்டாயம்.

# தமிழர்களின் தொல்லியல் அடையாளங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பௌத்த மத ஆதிக்கம்

## சிவசிறி காந்தக் குருக்கள் விசனம்



தமிழர்களுடைய தொல்லியல் அடையாளங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பௌத்த மதமும் தொல்லியல் திணைக்களமும் ஆதிக்கத்தை செலுத்துகின்றன என நாகதம்பிரான் ஆலய குரு சிவசிறி காந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவு வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்துள்ளார்

தமிழர்களாகிய நாங்கள் எமது விடுதலையை நோக்கி விடுதலைக்காக பலவடிவங்களிலே போராடி இருக்கின்றார்கள் ஆனாலும் அதற்கான முற்றுப் புள்ளியை அடைய முடியாத ஒரு நிலையில் இன்று தமிழ்தேசம் உள்ளது என்று குறிப்பிட்ட அவர், இப்போது தமிழர்களின் தொல்லியல் அடையாளங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் தொல்லியல் திணைக்களமும் பௌத்தமும் ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றன. குறிப்பாக வெடுக்கு நாறி மலை, குருந்தூர்மலை போன்ற இடங்களிலே விக்கிரகங்களை அழித்து அவற்றை உடைத்து சிதைத்து வந்திருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக் குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவதற்கு அனுமதிக்கவேண்டாம்!

## இந்தியாவிடம் கோரிக்கை

இலங்கையிலுள்ள குரங்குகளை சீனாவுக்கு வழங்குவது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளதாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான மையத்தின் தேசிய அமைப்பாளர் சூழலியலாளர் கலாநிதி ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

வனவிலங்கு மற்றும் தாவரவியல் சட்டத்தை மீறி அரசாங்கத்தால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சீனாவுக்கு குரங்குகளை வழங்கும் விவகாரத்தில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான கலாசார பிணைப்புக்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும்.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் வாழ்ந்த குரங்களிலிருந்து பிரிந்து வந்ததன் காரணமாக இலங்கையிலுள்ள குரங்குகள் உலகிலேயே பழைமை மிக்க குரங்குகளாக அடையாளப் படுத்தப்படுகின்றன. இலங்கையின் பரிணாம வளர்ச்சியில் அழிந்து போன 3 குரங்கு இனங்கள் உள்ளன.

இலங்கையிலுள்ள குரங்குகளுக்கும் இந்தியாவிலுள்ள குரங்குகளுக்கும் மரபணு ரீதியிலான பிணைப்புக்களும் கலாசார பந்தங்களும் உள்ளன.

அத்தோடு இந்து மதத்தைப் பின்பற்றும் மக்கள் குரங்குகளை தெய்வமாக வணங்குகின்றனர்.

அதே போன்று இந்தியாவில் குரங்குகளுக்கான ஆலயங்களைக் கூட அவதானிக்கலாம்.


இவ்வாறு இந்தியாவிலும், இலங்கையிலும் தெய்வமாக வணங்கப்படும் குரங்குகளையே சீனாவுக்கு விற்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

வன விலங்குகள் மற்றும் தாவரவியல் சட்டத்துக்கு முரணாக அரசாங்கம் குரங்குகளை விற்க முயற்சிக்கின்றது. இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# உயிருடன் உண்பதற்காகவே குரங்குகள் சீனாவுக்காம்

## சூழல் செயற்பாட்டாளர் நயன்ஹக ரன்வெல கருத்து



உயிருடன் உண்பதற்காகவே இலங்கை அரசாங்கம் குரங்குகளை சீனாவிற்கு அனுப்பவுள்ளமை தங்கள் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக சூழல் செயற்பாட்டாளர் நயன்ஹக ரன்வெல தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு சட்டத்தின் கீழ் பெருமளவு விலங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

வனவிலங்குகளை ஏற்றுமதி செய்வதில்லை என உடன்படிககையில் நாங்கள் கைச்சாத்திட்டுள்ளதால் குரங்களை ஏற்றுமதி செய்ய முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மூலம் அந்நிய செலாவணி பெருமளவில் கிடைக்காது தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரிகளும் இதன் பின்னால் உள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குரங்குகள் உயிருடன் உள்ளபோது அவற்றின் மூளைகளை உண்ணும் விசேட உணவு முறை சீனாவில் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# சமூக ஊடகங்களில் பரவும் செய்திகளை மறுக்கின்றது லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம்!

வாகன எரிபொருள் திறன் தொடர்பான சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகளை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் மறுத்துள்ளது. அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக கொள்ளளவுக்கு அதிகமாக எரிபொருளை நிரப்புவதைத் தவிர்க்குமாறு வாகன உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், அது வெடிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் சமூக வலைத்தளங்களில் வதந்திகள் பரவி வருகின்றன.

இது தொடர்பாகத் தெளிவுபடுத்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள ஐ.ஓ.சி. அத்தகைய எச்சரிக்கை எதையும் வெளியிடவில்லை என்றும், இது சமூக ஊடக தளங்களில் பரப்பப்படும் ஒரு போலி செய்தி என்றும் குறிப்பிட்டுள்ளது.

கால நிலைகளைப் பொருட்படுத்தாமல் வாகன தயாரிப்பாளர்களால் குறிப்பிடப்பட்ட அதிகபட்சம் வரம்பு வரை வாகனங்களில் எரிபொருளை நிரப்புவது முற்றிலும் பாதுகாப்பானது என ஐ.ஓ.சி. மேலும் தெரிவித்துள்ளது.

# சவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு நாளை!

ஹிஜ்ரி 1444 புனித சவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நாளை (வெள்ளிக்கிழமை) மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற இருக்கின்றது.

இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

நாட்டின் எப்பிரதேசத்திலாவது சவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112432110, 0112451245, 0777316415 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

# யாழ்.கொழும்புத்துறையில் வெடிமருந்துகள் மீட்பு!

*யாழ்ப்பாணம் கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் இருந்து 25 ஜெலட்நைட் குச்சிகள் நேற்று (புதன்கிழமை) மீட்கப்பட்டுள்ளன.*

*ஊர்காவற்துறை கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கடற்கரைக்கு அண்மையாக இருந்த பற்றைக்காடு ஒன்றினுள் அவை மீட்கப்பட்டுள்ளன.*

*கடற்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரால் அவை மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைக்காக அவை கடற்படை முகாமுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன.*

